# யாப்பும் அணியும் ஓர் பார்வை

KAMSAN

க.பொ.த உயர்தரம் / சாதாரண தர
மாணவர்களுக்குரியது

N.kam

ஆசிரியர்

சைவப்புலவர் சி.மதனமோகனராஜ்

B.A(Hons).M.A in Tamil, Dip.in Edu

ஆசிரியர் கிளி/கறுக்காய்த் தீவு ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAKESHWARAN

# யாப்பும் அணியும் ஓர் பார்வை

*உள்ளே*

- *யாப்பியல்*
- *அணியியல்*
- *சுருக்கவியல்*

**க.பொ.த உயர்தரம் / சாதாரண தர மாணவர்களுக்குரியது**

ஆசிரியர்
**சைவப்புலவர் சி.மதனமோனராஜ்**
B.A (Hons). M.A in Tamil. Dip.in.Edu
ஆசிரியர் கிளி/கறுக்காய்த் தீவு ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NAKESHWARAN

# முன்னுரை

மொழி ஒரு ஊடகமாகும். உலகிலே பேசப்படுகின்ற பல்லாயிரக்கணக்கான மொழிகளுள் செம்மொழியாகிய சிறப்பு நம் தமிழுக்குரியது. காலம் காலமாக வந்த பல ஆதிக்க சக்திகளின் அடாவடித்தனங்களிற்கும் அடிபணியாது தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்று வளர்ந்து வந்தது நம் தாய்மொழியாம் தமிழ். எல்லா மொழிகளிலும் இலக்கணங்கள் எழுதப் பட்டிருந்தாலும் கூட தமிழ் மக்கள், வாழ்க்கைப் பொருளுக்கும் இலக்கணம் கூறிய சிறப்பு நம் தமிழ் மொழியையே சாரும்.

தொல்காப்பியர் தொடக்கம் பேராசிரியர் நுஃமான் வரைக்கும் எண்ணிறைந்தவர்கள் இப் பணியில் தம்மை அர்ப்பணித்து தமிழ் அன்னைக்கு மகுடம் சூட்டினார்கள். அந்த வகையில் இன்று செம்மொழியாய் செயல்மொழியாய் வேற்று மொழி பேசுபவரும் விரும்பிப் படிக்கும் தேன் மொழியாய் உள்ள நம் தமிழ் மொழியைக் கற்போர் அம் மொழியின் சிறப்புக்களை தெளிந்து கற்க வேண்டின் அம் மொழிக்கு உரிய இலக்கணங்களையும் தெளிவாக அறிந்திருத்தல் அவசியமாகின்றது. இத்தகைய எண்ணத்தின் விளைவே க.பொ.த உயர்தரப் புதிய பாடத்திட்டத்தில் இலக்கண விடயங்கள் மிகுதியாகச் சேர்க்கப்பட்டமையாகும்.

சாதாரணமானவர்களால் அடைய முடியாத பெரும் கற் கோட்டைகளாக விளங்கிய தமிழ் இலக்கணத்தை கனியாக்கித் தர முயற்சிப்பதே இந்நூலாகும். உயர்தர மாணவர்களின் இலக்கண அறிவை மேம்படுத்துவதோடு செய்யுள் ஒன்றைப் படைக்கும் ஆற்றல் அவர்களிடத்தில் ஏற்பட வேண்டும் என்கின்ற என் மன உந்துதலின் விளைவே இந்நூலாகும். பல்கலைக்கழகத்திலும் முதுகலைமாணி பட்டப்பின் படிப்பிலும் சைவப்புலவர் வகுப்புக்களிலும் எனக்குக் கற்பித்த ஆசான்களின் பேரறிவும் என் தேடுதலின் மூலம் நான் பெற்ற நூலறிவும் இந்நூலாக்கத்திற்கு பெரிதும் துணை நின்றன.

பாற்கடலாகிய தமிழ் இலக்கணத்தை வெறும் சிறியவன் ஒருவன் சுருக்கித் தருதல் என்பது எட்டாக் கனியாகும். இருப்பினும் இயன்றவரை முயற்சித்து யாப்பியலில் வரும் முக்கிய அம்சங்களையும் அணியியலில் வரும் முக்கிய சில அணிகளையும் சற்று விரிவுபட இந் நூலில் சேர்த்துள்ளேன். அத்தோடு எழுத்தியல், சொல்லியல் என்பவற்றுள் வரும் முக்கிய விடயங்களை சுருக்க வினா விடைகளாகவும் தந்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் பெரும் பயன் கண்டு கற்போர் உலகம் உவகை கொள்ளும் என்பதில் ஐயம் இல்லை. இருப்பினும் 'ஆனைக்கும் அடி சறுக்கும்' எனுமாப் போல சிறியேனது பெரும்பணியில் தவறுகளும் ஏற்படக் கூடும். எனக் கருதி தங்கள் விமர்சனங்களை மன உவப்போடு ஏற்றுக் கொள்ளக் காத்திருக்கின்றேன். அறிஞர்களாகிய உங்களது கருத்துக்களை சிரமேற்கொண்டு என் மறுபதிப்பினை மேற்கொள்ளலாம். என எண்ணுகின்றேன்.

இத்தகைய இந்நூலினை யான் ஆக்குவதற்குத் துணையாக என்னுள் நின்று என்னை இயக்கிய திருவருட் சக்திக்கு முதற்கண் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அத்தோடு தமிழ் இலக்கணத் துறையில் நான் ஆர்வத்துடன் ஆய்வுகளை மேற்கொள்வதற்குக் காரணமாய் இருந்த எனது பாடசாலைக் கால ஆசிரியர்கள் பல்கலைக்கழகப் பேராசான்கள், பண்டிதர்கள் அனைவரும் இக் கணத்தில் என் மன உணர்வுகளால் நன்றிக்குரியவர்களே. அத்தோடு இந்நூல் அழகாகவும் விரைவாகவும் வெளிவருவதற்குக் காரணமாயிருந்த வைரஸ் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் இந்நூலுக்கான அணிந்துரையை வழங்கிய கிளிநொச்சிக் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி.மதுரநாயகம் அவர்களுக்கும் என்றென்றும் நான் நன்றிக்குரியவனே.

இந் நூலை மாணவர் சமுதாயமும் கற்றோர் உலகமும் களிப்புடன் ஏற்றுப் பயன் பெறும் என்ற நம்பிக்கையோடு உங்கள் கரங்களில் இந்நூலைத் தவள விடுகின்றேன்.

ஆசிரியர்
சி.மதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கிளிநொச்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த கறுக்காய்த் தீவு மகாவித்தியாலய ஆசிரியராகிய சிவதாசன் மதனமோகனராஜ் என்பவரால் க.பொ.த உயர்தர மாணவர்களின் தமிழ்ப் பாட அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்கோடு வெளியிடப்படுகின்ற "யாப்பும் அணியும் ஒரு பார்வை" எனும் இந்நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

இந் நூலாசிரியர் கிளிநொச்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவரது கல்வி வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் கொண்டு அவர்களது அடைவு மட்டத்தை உயர்த்த வேண்டும் என்று அயராது பாடுபடுகின்ற ஆசிரியர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர்.

இவர் பல்கலைக்கழகத்தில் தமிழை சிறப்புக் கலைப் பாடமாகப் பயின்றதோடு பட்டப்பின் கல்வியில் தமிழிலில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றவர். தமிழ் மீது இவர் கொண்ட ஆர்வமும் பற்றும், மாணவர்களுக்கான இவரது கற்றல் கற்பித்தல் செயலொழுங்கில் நான் கண்டு கொண்ட விடயமாகும். எமது பிரதேசத்தில் நிகழ்ந்த போர்க்காலச் சூழலினால் எமது மாணவர்கள் நூல்களைப் பெற்றுக் கொள்ளமுடியாதபடி நூலகங்கள் யாவும் அழிந்தொழிந்து போயின இன்றைய சூழலில் எமது மாணவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தம்மை தயார்படுத்தவேண்டியவர்களாய் இருக்கின்றனர். இந் நிலையில் ஆசிரியரின் இந்நூல் மாணவர்களின் கரங்களுக்கு கிடைப்பது அவர்களின் இலக்கண சம்பந்தமான ஐயங்களை தீர்க்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

இவர் தனது கற்றல் கற்பித்தல் அனுபவங்கள் மூலம் தான் பெற்றுக் கொண்ட அறிவையும் அனுபவத்தையும் இந் நூல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இந் நூலில் யாப்பியல், அணியியல், சுருக்கவியல் எனும் மூன்று பிரிவுகள் உள்ளடக்கப்பட்டு சுருக்க விளக்கங்களாக இலக்கணத்தை எளிமைப்படுத்த முயற்சித்துள்ளார். இந் நூலினை மாணவர் சமுதாயம் தக்க முறையில் பயன்படுத்தி இலக்கண சம்பந்தமான விடயங்களில் தெளிவுபெற முயலவேண்டும். அத்தோடு ஆசிரியரின் தமிழ் சார்ந்த நூற்பணி மேலும் மேலும் வளர இறையாசி கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருமதி. மதுரநாயகம்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
(தமிழ்த்துறை)
வலயக்கல்வி அலுவலகம்
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாப்பிலக்கணம்

தமிழ் மொழியில் செய்யுள்களைப் படைப்பதற்கு இன்றியமையாத ஒன்றே யாப்பு ஆகும். இவ் யாப்பு முறைகள் பற்றி யாப்பெருங் கலக்காரிகை, தொல்காப்பியம் என்னும் நூல்கள் அழகாக விளக்கி உள்ளன. செய்யுளின் ஓசையை ஒழுங்கு படுத்துவதற்காகவும் இனிமையை அதிகரிப்பதற்காகவும் இவ் யாப்புப் பற்றிய அறிவு செய்யுள் இயற்றும் ஒருவருக்கு அவசியமாகின்றது.

## யாப்பு

பொருள் உள்ள சொற்களைக் கொண்டு கற்று வல்ல புலவர்களால் அணி பெறப் பாடப்படுவதே யாப்பு ஆகும். யாப்பு, பாட்டு, தூக்கு, தொடர்பு, செய்யுள் என்பன ஒரு பொருட் சொற்கள் ஆகும்.

## யாப்பின் வகை

இவ் யாப்பு பின்வருமாறு இரு வகைப்படும் அவையாவன.

01. பா
02. பாவினம்

## யாப்பிற்குரிய உறுப்புக்கள்

பாவும் பாவினமுமாகிய இருவகை அம்சங்களையும் உள்ளடக்கிய யாப்பிற்கு பின்வரும் ஆறும் உறுப்புக்களாக அமையும். அவையாவன

01. எழுத்து
02. அசை
03. சீர்
04. தளை
05. அடி
06. தொடை

## எழுத்து

எழுத்தெனப்படுவது மொழிக்கு முதற் காரணமாகிய அணுத்திரளாகிய ஒலியின் கூட்டம் என்பர். அதாவது ஒலி அணுத்திரளின் சேர்க்கையே எழுத்து எனப்படும்.

**உதாரணம்** : வாயைத்திறக்கின்ற போது வரும் முதல் ஒலியை நாம் 'அ' என்னும் வரி வடிவத்தில் குறிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலி வடிவத்திற்குக் கொடுக்கப்படுகின்ற வரி வடிவமே எழுத்து. இவ் எழுத்து பின்வருமாறு இரண்டு வகைப்படும்.

*01.* முதல் எழுத்து

*02.* சார்பு எழுத்து

குறிப்பு :- செய்யுள் அடியில் வரும் எழுத்துக்களைக் கணக்கிடும் பொழுது மெய்யெழுத்துக்களை கணக்கில் சேர்ப்பதில்லை. அதே போல் தளை சிதைய வரும் இடத்து குற்றியலுகரமும் அளபெடையும் கணக்கிடப்படுவதில்லை.

**அசை**

எழுத்துக்களால் ஆக்கப்பட்டுச் சீர்க்கு உறுப்பாக அமைவதே அசையாகும்.

**அசையின் வகை**

இவ் அசையானது பின்வருமாறு இரண்டு வகைப்படும்.

*01.* நேரசை

*02.* நிரையசை

**நேரசை**

குறில் எழுத்தேனும் நெடில் எழுத்தேனும் தனித்து வந்தாலும் அல்லது மெய்யெழுத்தோடு ஒன்று சேர்ந்து வந்தாலும் அவை நேரசைகளாகும்.

*உதாரணம் : 1*

சொல் - குறில் ஒற்றடுத்தாய நேரசை

வான் - நெடில் ஒற்றடுத்தாய நேரசை

மேற் சொன்ன உதாரணங்களில் குறில் எழுத்து மெய்யெழுத்தோடும் நெடில் எழுத்து மெய்யெழுத்தோடும் சேர்த்து வந்துள்ளமையைக் காணலாம்.

*உதாரணம் : 2*

ஆ - நெடிலாய நேரசை

பூ - குறிலாய நேரசை

மேற் சொன்ன உதாரணங்களில் நெடிலும் குறிலும் தனித்தனியாக வந்து நேரசைகளாயின.

குறிப்பு : "அ - அவன்" என்பது போல விட்டிசைந்த நிலை தவிர தனிக் குறில் எழுத்து (அ, இ, உ, எ, ஒ) என்பன மொழிக்கு முதலில் நேரசையாகாது. மேற்சொன்ன அடிப்படையில் பார்க்கின்ற போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரசை பின்வருமாறு நான்கு வகைப்படும். அவையாவன.

01. குறிலாய நேரசை - பூ
02. நெடிலாய நேரசை - ஆ
03. குறில் ஒற்றடுத்தாய நேரசை - சொல்
04. நெடில் ஒற்றடுத்தாய நேரசை - ஆல்

**நிரையசை**

குறிலிணையேனும் குறில் நெடிலேனும் தனித்து வந்தாலும் அல்லது மெய் எழுத்தோடு (ஒற்று) வரினும் அவை நிரையசைகளாகும்.

உதாரணம் : அணி - குறிலிணையாலாய நிரையசை
அணில் - குறிலிணை ஒற்றடுத்தாய நிரையசை
குரா - குறி நெடிலாய நிரையசை
குரால் - குறி நெடில் ஒற்றடுத்தாய நிரையசை

**சீர்**

அசை, சிறு பான்மை தனித்தும் பெரும்பாலும் இரண்டு முதலியவற்றைத் தொடர்ந்தும் வருமாயின் அது சீராகும்.

**சீரின் வகை**

சீர் பின்வருமாறு நான்கு வகைப்படும். அவையாவன.

01. ஓரசைச் சீர்
02. ஈரசைச் சீர்
03. மூவசைச் சீர்
04. நாலசைச் சீர்

**ஓரசைச் சீர்**

நேரசை தனியாகவும் நிரயசை தனியாகவும் வருமாயின் அவையிரண்டும் ஓரசைகளாகும்.

உதாரணம் : நேர் அசை - நாள்
நிரை அசை - மலர்

குறிப்பு : இச் சீர் பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றில் வரும்

**உதாரணம்** : மலர் மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்.
நிலமிசை நீடுவாழ் வார்.

இங்கு இறுதியாக வந்த 'வார்' என்பது மேற்சொன்ன நாள் என்னும் வாய்ப்பாட்டில் வருவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈரசைச் சீர்

இரண்டு அசைகளாக சேர்ந்து வருகின்ற நான்கு சீர்களும் ஈரசைச் சீர்களாகும். அவையாவன.

01. நேர் நேர் - தேமா

02. நிரை நேர் - புளிமா

03. நிரை நிரை - கருவிளம்

04. நேர் நிரை - கூவிளம்

குறிப்பு : இச் சீர் அகவற்பாவிற்குரிய சீராகும். இச்சீர் இயற்சீர் அகவற்சீர் என்கின்ற மறு பெயர்கள் பெறும்.

### மூவசைச் சீர்

ஈரசைச் சீரில் வரும் மேற்சொன்ன நான்கு சீர்களின் இறுதியிலும் நேரும், மாறாக மீண்டும் நிரையும் என வரும் எட்டுச் சீர்களும் மூவசைச் சீர் எனப்படும்.

உதாரணம் :

| | | | | |
|---|---|---|---|---|
| நேர் நேர் | + நேர் | - தே மாங் காய் | காய்ச்சீர் |
| நிரை நேர் | + நேர் | - புளி மாங் காய் | |
| நிரை நிரை | + நேர் | - கரு விளங் காய் | |
| நேர் நிரை | + நேர் | - கூ விளங் காய் | |
| நேர் நேர் | + நிரை | - தே மாங் கனி | கனிச்சீர் |
| நிரை நேர் | + நிரை | - புளி மாங் கனி | |
| நிரை நிரை | + நிரை | - கரு விளங் கனி | |
| நேர் நிரை | + நிரை | - கூ விளங் கனி | |

குறிப்பு : இவ் எட்டும் உரிச்சீர் எனவும் இவற்றுள் வருகின்ற முதல் நான்கும் காய்ச்சீர் எனவும் இவை வெண்பாவிற்கு உரியனவாய் வெண்சீர் எனவும் இறுதியில் உள்ள கனிச் சீர் நான்கும் வஞ்சிப்பாவிற்கு உரியசீர் என்றும் கூறுவர்.

### நாலசைச் சீர்

மேற் சொன்ன மூவசைச் சீர் எட்டின் இறுதியிலும் நேரசை தனியாகவும் நிரையசை தனியாகவும் சேரும் போது வரும் மொத்தம் 16 சீர்களும் நாலசைச் சீராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதாரண வாய்ப்பாடு**

**தண்பூ வாய்ப்பாடு**

| | | |
|---|---|---|
| தேமாந் தண்பூ | - | நேர் நேர் நேர் நேர் |
| புளி மாந் தண்பூ | - | நிரை நேர் நேர் நேர் |
| கரு விளந் தண்பூ | - | நிரை நிரை நேர் நேர் |
| கூ விளந் தண்பு | - | நேர் நிரை நேர் நேர் |

**நறும்பூ வாய்ப்பாடு**

| | | |
|---|---|---|
| தே மா நறும்பூ | - | நேர் நேர் நிரை நேர் |
| புளி மா நறும்பூ | - | நிரை நேர் நிரை நேர் |
| கரு விள நறும்பூ | - | நிரை நிரை நிரை நேர் |
| கூவிள நறும்பூ | - | நேர் நிரை நிரை நேர் |

**தண்ணிழல் வாய்பாடு**

| | | |
|---|---|---|
| தேமாந் தண்ணிழல் | - | நேர் நேர் நேர் நிரை |
| புளிமாந் தண்ணிழல் | - | நிரை நேர் நேர் நிரை |
| கரு விளந் தண்ணிழல் | - | நிரை நிரை நேர் நிரை |
| கட விளந்தண்ணிழல் | - | நேர் நிரை நேர் நிரை |

**நறுநிழல் வாய்ப்பாடு**

| | | |
|---|---|---|
| தேமா நறுநிழல் | - | நேர் நேர் நிரை நிரை |
| புளிமா நறுநிழல் | - | நிரை நேர் நிரை நிரை |
| கரு விள நிழல் | - | நிரை நிரை நிரை நிரை |
| கூ விள நறுநிழல் | - | நேர் நிரை நிரை நிரை |

குறிப்பு :- இவ் நாலசைச் சீர்களும் குற்றியலுகரம் வந்தால் மட்டுமன்றி பெரும்பாலும் கலிப்பாவினுள்ளும் அகவல் பாவினுள்ளும் வரமாட்டாது. மாறாக வஞ்சிப்பாவினுள் பெரும் பாலும் வரும்.

**தளை**

முதலில் நின்ற சீரின் இறுதி அசையோடு வந்து சேருகின்ற சீரின் முதல் அசை ஒன்றாகவேனும் அல்லது வேறாகவேனும் நின்றால் அதுவே தளை ஆகும். இது பின்வருமாறு இரு வகைப்படும்.

01. ஒன்றி வரும் தளை

02. ஒன்றாது வரும் தளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஒன்றி வரும் தளை

இது பின்வருமாறு இரு விதமாக அமையும்.

01. நேர் முன் நேர்

02. நிரை முன் நிரை

### ஒன்றாது வரும் தளை

இது பின்வருமாறு இரு விதமாக அமையும்.

01. நேர் முன் நிரை வருதல்

02. நிரை முன் நேர் வருதல்

### தளையின் வகைகள்

தளைகள் பின்வருமாறு 7 வகைப்படும். அவையாவன

01. நேரொன்று ஆசிரியத் தளை

02. நிரை ஒன்று ஆசிரியத் தளை

03. வெண் சீர் வெண் தளை

04. இயற்சீர் வெண் தளை

05. ஒன்றிய வஞ்சித் தளை

06. ஒன்றாத வஞ்சித் தளை

07. கலித் தளை

### நேரொன்று ஆசிரியத் தளை

'மாச்' சீர் முன் (தேமா, புளிமா) நேர்ச்சீர் வந்தாலும் 'நாள்' சீர் முன் நேர்ச்சீர் வந்தாலும் அது நேர் ஒன்று ஆசிரியத் தளையாகும்.

### நிரை ஒன்று ஆசிரியத் தளை

'விள' ச் சீர் முன் (கரு விளம், கூவிளம்) நிரைச் சீரும் "மலர்ச்" ச்சீர் முன் நிரைச் சீரும் வந்தாலும் அவை நிரை ஒன்று ஆசிரியத் தளையாகும்.

### வெண் சீர் வெண் தளை

'காய்ச்' சீர் முன் (தேமாங்காய் புளி மாங்காய் கரு விளக்காய் கூவிளங்காய்) முன் நேர்ச் சீரும் 'பூ' ச்சீர் முன் (தேமாந் தண்பூ, புளிமாந் தண்பூ, கருவிளந் தண்பூ, கூவிளந் தண்பூ, தேமா நறும் பூ, புளிமா நறும்பூ, கருவிள நறும்பூ, கூவிள நறும் பூ) நேர்ச்சீர் வருவதும் வெண் சீர் வெண் தளையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இயற்சீர் வெண் தளை

'மா'ச்சீர் முன் (தேமா, புளிமா) நிரைச்சீரும் 'விள'ச்சீர் முன் (கரு விளம் கூவிளம்) நேர் சீரும் "மலர்" ச்சீர் முன் நேர் வருவதும் "நாள்" சீர் முன் நிரைச் சீர் வருவதும் இயற் சீர் வெண் தளையாகும்.

### ஒன்றிய வஞ்சித் தளை

'கனி'ச் சீர் முன் (தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி) நிரைச் சீர் வருவதுடன் 'நிழல்' சீர் முன் (தேமாந் தண்நிழல், புளிமாந் தண்நிழல், கருவிழந் தண்நிழல், கூவிழந்தண் நிழல், தேமாநறு நிழல், புளிமாநறுநிழல், கருவிளநறு நிழல், கூவிள நறுநிழல்) நேர் வருவதும் ஒன்றிய வஞ்சித் தளை ஆகும்.

### கலித்தளை

'காய்' சீர் முன் (தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய்) நிரைச் சீர் வருவதும் "பூ" ச்சீர் முன் (தேமாந் தண் பூ, புளிமாந் தண் பூ, கருவிளந்தண் பூ, கூவிளந் தண்பூ, தேமா நறும் பூ புளிமா நறும்பூ, கருவிள நறும்பூ, கூவிளநறும்பூ) நிரைச் சீர் வருவதும் கலித்தளையாகும்.

### ஒன்றா வஞ்சித் தளை

'கனி'ச் சீர் முன் (தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி) நேர் வருவதும் 'நிழல்' சீர் முன் (தேமாந் தண் நிழல், புளிமாந்தண் நிழல், கருவிளந் தண் நிழல், கூவிளந்தண் நிழல், தேமா நறு நிழல், புளிமா நறு நிழல், கருவிளநறுநிழல், கூவிளநறு நிழல்) நேர் வருவதும் ஒன்றா வஞ்சித் தளையாகும்.

### தளைக்குறிய உதாரணச் செய்யுள்கள்

அகவற்பா

தேனார் கஞ்சச் செம்ம லாதி
வானோர் மாதர் மங்கலங் களத்திடை
வலியொடு நிலை பெற மலிபெருங் கருணையி
னலைதரு மிருள்லிட மணிமிடற் றிருந்துந்
தில்லையுட் சிவபிரான் றிருவடி
யொல்லையிற் பரசுநர்க் குயர்கதி யெளிதே

இச் செய்யுளின் முதலாவது வரியில் தேனார் + கஞ் என்னும் சீர்களில் முதலாவது சீரைப்பிரித்தால் தே + னார் என வரும் இது நேர் + நேர் இது தேமா என்னும் வாய்ப்பாடாகும். வந்து சேர்ந்த சீர் "கஞ்" என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது நேர் அசையாகும். எனவே மாச்சீர் முன் நேர் அசை வந்தால் அது நேர் ஒன்றாசியத் தளையாகும் என தளை என்னும் பகுதியில் சொல்லப்பட்டதற்கிணங்க இது நேரொன்றாசிரியத் தளையாகும்.

பயிற்சி

மேற்சொன்ன பாட்டில் உள்ள ஏனைய சீர்களையும் பிரித்து தளைகளாக இனம் காண்க

**வெண்பா**

பெரியவர் தந் நோய்போற் பிறர் ஒருசொல் கண்டுள்ள
மெரியி னிழுதாவ ரென்க - தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

இங்கு உள்ள இறுதி அடியில் கண்டு + கலுழுமே என்னும் தளை வருகின்றது. கண்டு என்னும் சீரை பிரிக்கும் போது கண் + டு எனப் பிரிப்போம். இது நேர் + நேர் எனப் பிரிந்து தேமா என்னும் வாய்ப்பாடாகின்றது. அதனோடு வந்து சேரும் சீர் கலுழுமே இதனைப் பிரித்தால் கலு + ழுமே இது நிரை + நிரை எனப் பிரிந்து கருவிள வாய்ப்பாடாகின்றது. எனவே நின்ற சீர் மாச் சீராகவும் (தேமா) வரும் சீரின் முதல் அசை நிரையாகவும் காணப்படுவதால் இது இயற் சீர் வெண் தளையாகும்.

பயிற்சி

மேற்சொன்ன வெண்பாவில் உள்ள ஏனைய சீர்களையும் பிரித்து தளைகளைக் கண்டறிக.

**வஞ்சிப்பா**

மண்ணீரனல் - வளிவானோடு
வெண்ணீர் மதி - வெங்கதிருயி
ரெண்ணீடுரு - வினயபசுபதி
**நாளும்**
என் மன மிடங் கொண் டுறைதலால்
வன் மனக் கொடியர் சொற் கிலைமயங்குதலே

மேற் சொன்ன பாடலில் உள்ள வெண்ணீர் மதி + வெங்கதிருயி எனும் தளையை எடுத்து நோக்கினால் வெண்ணீர் மதி என்னும் சீர் நேர் + நேர் + நிரை ஆகி தேமாங்கனி என்னும் வாய்ப்பாட்டைப் பெறும். வெங்கதிருயி என்னும் சீரைப் பிரித்தால் நேர் + நிரை + நிரை ஆகி கூவிளங் கனி என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பாடாகும். எனவே கனிச்சீர் முன் நேர் அசை வந்தால் அது ஒன்றா வஞ்சித் தளையாகும்.

**பயிற்சி**

மேற் சொன்ன பாடலில் உள்ள ஏனைய சீர்களையும் பிரித்து தளைகளைக் கண்டறிக?

### கொச்சகக் கலிப்பா

அஞ்சம்போ னடையுமையா ளகங்களிப்பச் சுரர்பரவ
நெஞ்சஞ்சேர் தருமன்பி னெறிமுனிவர் கரங்குவிப்ப
விஞ்சுஞ்சீர்த் தனித்தில்லை வியன்பொழுதுவி டைமாடுங்
கஞ்சந்தாழ் திருவடிகள் கருதிமட னொழி நெஞ்சே

மேற் சொன்ன பாடலில் மூன்றாவது அடியில் உள்ள விஞ்சுஞ் சீர்த் + தனித்தில்லை என்னும் தளையை எடுத்துக் கொண்டால்

விஞ் + சுஞ் + சீர்த்
நேர் + நேர் + நேர் + எனவும்

தனித் + தில் + லை
↓ ↓ ↓
நிரை + நேர் + நேர் + எனவும் பிரிந்து

நேர் + நேர் + நேர் என்பது தேமாங்காய் என்னும் வாய்ப்பாட்டில் வரும் அதே நேரம் வந்து சேரும் சீரானது நிரை நேர் நேர் எனப் பிரிந்து புளிமாங்காய் என்னும் வாய்ப்பாட்டின் படி வந்துள்ளது. எனவே நின்ற சீர் காய்ச்சீராகவும் வந்து சேரும் சீரில் உள்ள முதலாவது அசை நிரையாகவும் வந்தால் அது கலித்தளையாகும்.

**பயிற்சி**

மேற் சொன்ன கலிப்பாவில் வரும் ஏனைய சீர்களையும் பிரித்து தளைகளை இனம் காண்க?

### அடி

தளைகள் ஒன்றோ அல்லது பலவோ சேர்ந்து வருதலே அடி ஆகும். இவ்வடியானது பின்வருமாறு ஐந்து வகைப்படும். அவையாவன

01. குறளடி
02. சிந்தடி
03. அளவடி அல்லது நேரடி
04. நெடிலடி
05. கழி நெடிலடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குறளடி

இரு சீர்களை மட்டும் கொண்ட அடி குறளடி எனப்படும்.
**உதாரணம் :** மண்ணீரல் வளிவானொடு

### சிந்தடி

மூன்று சீர்களைக் கொண்டு வரும் அடி சிந்தடி எனப்படும்.
**உதாரணம் :** கண்டு கலுழுமே கண்

### அளவடி அல்லது நேரடி

நான்கு சீர்களைக் கொண்டு ஒரு அடி அமையுமானால் அது அளவடி எனப்படும்.
**உதாரணம் :** பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய் கண்டுள்ள

### நெடிலடி

ஐந்து சீர்களைக் கொண்டதாக ஒரு அடி வருமாயின் அது நெடிலடி என அழைக்கப்படும்.
**உதாரணம் :** ஆவா வென்றா யஞ்சின ராழ்ந்தா ரொருசார்

### கழிநெடிலடி

இது ஐந்திக்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டு வருகின்ற அடி கழிநெடிலடி எனப்படும்.
உதாரணம் : கோமுனிவ ருக்குமரி தாய்முது மறைப்பனுவல் கூரிய பரப்பி

### தொடை

செய்யுள் ஒன்றில் வருகின்ற சீர்களிலேனும் அடிகளிலேனும் எழுத்துக்கள் ஒன்றி வருதலாகும் (ஒரே எழுத்துக்கள் அல்லது அவற்றின் இன எழுத்துக்கள்) இத் தொடை பின்வருமாறு ஐந்து வகைப்படும்.

**01.** எதுகைத் தொடை
**02.** மோனைத் தொடை
**03.** முரண் தொடை
**04.** அளபெடைத் தொடை
**05.** இயைபுத் தொடை

### மோனைத் தொடை

முதற் சீரின் முதலெழுத்தோடு பின்வரும் சீர்களில் ஒன்றினுள்ளேனும் பலவற்றினுள்ளேனும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனைத் தொடையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் : கானகத்து காதலியைக் காரிருளில் கைவிட்ட இங்கு கா என்னும் எழுத்து எல்லாச் சீர்களிலும் வந்துள்ளதைக் காணலாம்.

அ - ஆ - ஐ - ஔ இந் நான்கு ஒன்றுக்கொன்று மோனை ஆகும்.

இ - ஈ - எ - ஏ இவை நான்கும் ஒன்றுக்கொன்று மோனை ஆகும்.

உ - ஊ - ஒ - ஓ ஒன்றுக்கொன்று மோனை ஆகும்.

ஞ - நவும் ச - தவும் ம - வவும் ஒன்றுக்கொன்று மோனையாகும்.

**எதுகைத் தொடை**

அடி தொறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாமெழுத்து ஒன்றி வருவது எதுகைத் தொடையாகும்.

உதாரணம் : "துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக் காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார் மாட்டு நில்லாது செல்வஞ்
சகுடக்காற் போல வரும்"

மேற் சொன்ன பாடலில் துகடீர், பகடு, வகடுற, சகடக்காற் போன்ற சீர்களில் முதலெழுத்து அளவொத்து குறில் எழுத்தாக இருக்க இரண்டாவது எழுத்து எல்லாச்சீர்களிலும் 'க' என வந்துள்ளதால் இது எதுகைத் தொடையாகும்.

**முரண் தொடை**

சொல்லாலும் பொருளாலும் மாறுபடத் தொடுப்பது முரண் தொடை ஆகும்.

**உதாரணம் :** காலையும் மாலையும் கைகூப்பிக் கால் தொழுதான் இங்கு காலையும் மாலையும் என்பது முரண் தொடையாகும்.

**அளபெடைத் தொடை**

உயிரிளபெடையாயினும் ஒற்றளபெடையாயினும் ஒன்றிவரத் தொடுப்பது அளபெடைத் தொடையாகும்.

**உதாரணம் :** பரூஉத்தடக்கை மதயானைப் பணை யெருத்தின் மிசைத் தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழ
இங்கு உயிரளபெடை, பரூஉத்தடக்கை, குரூஉக்கொண்ட ஒன்றி வந்தமையைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயைபுத் தொடை**

இறுதி எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடையாகும்.
உதாரணம் : மறவாத வன்பினேன் மனனிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையோன் றுயர்தீரு மாறுரையாய்
இங்கு 'ய்' என்னும் எழுத்து இறுதி எழுத்தாக வந்தமையைக் காணலாம்.
மேற் சொன்ன தொடைகள் தவிர பின்வரும் தொடைகளும் அறிஞர்களால் கூறப்படும் அவையாவன

01. இணை - முதலிரு சீர்களில் வருவது (1, 2)
02. பொழிப்பு - முதற் சீரிலும் மூன்றாம் சீரிலும் வரும் (1, 3)
03. ஒரூஉ - முதற் சீரிலும் நான்காம் சீரிலும் வரும். (1, 4)
04. கூழை - முதல் மூன்று சீரிலும் வரும். (1, 2, 3)
05. மேற்கதுவாய் - இரண்டாம் சீரொழிந்த ஏனைய சீர்களில் வருவது (1, 3, 4)
06. கீழ்க்கதுவாய் - மூன்றாம் சீரொழிந்த ஏனைய சீர்களில் வருவது (1, 2, 4)
07. முற்று - நான்கு சீரிலும் வருவது (1, 2, 3, 4)

**பா**

இரண்டு முதலிய அடிகளால் ஆக்கப்பட்டு வெண்பா முதலிய பெயர் பெற்று வருவதே பா ஆகும். இப் பா பின்வருமாறு ஆறு வகைப்படும். அவையாவன

01. வெண்பா
02. அகவற்பா
03. கலிப்பா
04. வஞ்சிப்பா
05. மருட்பா
06. நூற்பா

**பாவினம்**

மேற்சொன்ன நான்கு பாக்களுக்கும் இனங்களாக பின்வரும் பாவினங்கள் அமையும்.

01. தாழிசை
02. துறை
03. விருத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெண்பா**

இறுதி அடி மூன்று சீர் கொண்ட அடியாகவும் ஏனைய அடிகள் நான்கு சீர் கொண்ட அடியாகவும் பெற்று காய்ச்சீரும் அகவற் சீரையும் கொண்டு வெண்சீர் வெண் தளையும் இயற்சீர் வெண்தளையும் பொருந்த மற்றச் சீரும் தளையும் பெறாது காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்ப்பாட்டில் ஏதாவது ஒன்றை முடிக்கும் சொல்லாகவும் கொண்டு செய்யப்படுவது வெண்பா ஆகும்.

**உதாரணம் :** கூற்றங் குமைத்த குரைகழற்காற் கும்பிட்டுத்
தோற்றந் துடைத்தேந் துடைத்தேமாற் - சீற்றஞ்செய்
யேற்றினான் றில்லை யிடத்தினா னென்னினியாம்
போற்றினா னல்கும் பொருள்

இவ் வெண்பாவானது பின்வருமாறு ஐந்து வகைப்படும் அவையாவன

01. குறள் வெண்பா
02. நேரிசை வெண்பா
03. இன்னிசை வெண்பா
04. சிந்தியல் வெண்பா
05. பஃறொடை வெண்பா

**குறள் வெண்பா**

இரண்டு அடி கொண்டு ஆக்கப்படும். உதாரணம்
"உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்"

**நேரிசை வெண்பா**

நான்கடியைக் கொண்டு இரண்டாவது அடியின் இறுதிச்சீர் தனிச் சொல்லாய் வர அடி முழுவதும் ஒரெதுகையைக் கொண்டும் அல்லது வெவ்வேறு எதுகையைக் ெ காண்டும் வரும்.

**உதாரணம் :** கூற்றங் குமைத்த குரைகழற்கால் கும்பிட்டுத்
தோற்றந் துடைத்தேந் துடத்தேமாற் - சீற்றஞ் செய்
யேற்றினான் றில்லை யிடைத்தினா னென்னினியாம்
போற்றினா னல்கும் பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இன்னிசை வெண்பா

நேரிசை வெண்பாவில் நின்றும் சிறிது வேறுபட்டதாய் இரண்டாவது அடியில் வரும் தனிச்சொல் இன்றி நான்கு அடிகளில் வருவது ருவது இன்னிசை வெண்பா ஆகும்.

உதாரணம் :- கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோழி
றவக்குட்டந் தன்னுடையா னீந்து மனவக் குட்டங்
கற்றான் கடந்து விடும்.

### சிந்தியல் வெண்பா

மூன்றடியை உடையதாய் நேரிசை வெண்பாவைப் போல் வருவது நேரிசை சிந்தியல் வெண்பா என்றும் இன்னிசை வெண்பாவைப் போல் வருவது இன்னிசை சிந்தியல் வெண்பா என்றும் அழைப்பர்.

### நேரிசை சிந்தியல் வெண்பா

உதாரணம் : "அறிந்தானை யேத்தி யறிவாங் கறித்து
செறிந்தார்க்குச் செல்வ னுரையச் - சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு

### இன்னிசை சிந்தியல் வெண்பா

உதாரணம் : போற்றுமின் போற்றுமின் போற்றுமின்
கூற்றங் குமைக்க வருமுன் னமரங்கா
ளேற்றுகந்தான் பொற்றா ளினை

### பஃறொடை வெண்பா

இது நான்கு அடியிலும் கூடிய பல அடிகளால் வரும்.

### அகவற்பா

பெரும்பாலும் ஒவ்வொரு அடியிலும் நாற்சீர்களைக் கொண்டு இயற்சீரைப் பெரும்பான்மையாகவும் பிறசீர்களையும் இடையிடையே கொண்டும் தனக்குரிய தளையைப் பெற்றும் பிற தளை மயங்கியும் கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் இரு சீரும் கலவாது மூன்று முதலிய பல அடிகளைக் கொண்டு வருவது அகவற்பா எனப்படும். இதனை ஆசிரியப்பா எனவும் அழைப்பர்.

உதாரணம் : "பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
முழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியற்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவளே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆசிரியப்பா பின்வருமாறு நான்கு வகைப்படும். அவையாவன.

01. நேரிசை ஆசிரியப்பா

02. இணைக் குறளாசிரியப்பா

03. நிலை மண்டிலவாசிரியப்பா

04. அறிமறி மண்டில வாசிரியப்பா

**கலிப்பா**

வெண்சீர் மிகுதியாகவும் "மா" சீரும் 'விளங், கனி" ச்சீரும் பெறாது பிறசீர்களுஞ் சிறுபான்மை கலந்து கலித்தளையும் பிறதளையும் தழுவி, தரவு, தாழிசை, அராகம், அப்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம், என்னும் ஆறு உறுப்பினுள் ஏற்பன கொண்டு நாற்சீரடியால் வருவது கலிப்பா அனைத்திற்கும் பொது வரைவிலக்கணமாகும்.

**உதாரணம் :** தொல்லுலகம் படுசுடிகைச் சுடர் மணி விளக் கேந்தும்
பல் பொறிய படவரவு மரு புலியும் பணிசெய்ய
வந்தரதுந் துபிமுழங்க வமரர் மலர் மழைசிந்த
விந்திரனு மலரவனுங் கரியவனு மேத்தெடுப்ப
சூடகத் தளிர் செங்கைத் துளணவி துனைக் கண்களிப்ப
வாடகத் திருமன்றத் தனவராத நடஞ்செய்வோய்

கலிப்பா ஆனது பின்வருமாறு மூன்று வகைப்படும்.

01. ஒத்தாழிசைக் கலிப்பா

02. வெண்கலிப்பா

03. கொச்சகக் கலிப்பா

**வஞ்சிப்பா**

பெரும்பாலுந் தன் தளையுஞ் சிறுபான்மை பிற தளையுந் தழுவி இருசீரடியாலேனும் மூச்சிரடியாலேனும் மூன்று முதலிய பல அடிகளைக் கொண்டுதனிச் சொற் பெற்று அகவற் சுரிதகத்தால் முடிவது வஞ்சிப்பா எனப்படும். உதாரணம்

எறிவெண்டிரைக் கடல் சூழ் புவி யெளிசெய்தினு
மிறவந்துடைப் பொழுதுய்ந்திட லுளதென்னினு
மறிவின்றிறத் துயர்ந்தோர்படி றிசைகின்றிலர்
முன்வரு மின்பினு
அதனால் முறைப்பட நாடிற்
பின்வரு மிடர்மிகப் பெரிதா மெனவே"

இவ் வஞ்சிப்பா பின்வருமாறு இரண்டு வகைப்படும்.

01. குறளடி வஞ்சிப்பா

02. சிந்தடி வஞ்சிப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மருட்பா

இது புறநிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவியறிவிறூஉ என்னும் நான்கு பொருள் மேலும் வெண்பா முதலாக ஆசிரியப்பா ஈறாக வருவன மருட்பா ஆகும். உதாரணம்

திருநுதல் வேர்வரும் புந் தேங்கோதை வாடும்
இரு நிலஞ் சேவடியுந் தோயு - லிபதந்த
போகித முண்கணு மிகைக்கு
மாகு மற்றிவ ளகளிடைத் தணங்கே

### நூற்பா

சில வகை எழுத்துக்களாலாகிய சொற்றொடராய் பலவகை பொருள்களை விளக்கி திட்பமும் நுட்பமும் அமைத்து வருவது நூற்பா எனப்படும். உதாரணம்

எழுத்தெனப்படுவ
அகரமுத
கைர விறுவாய் முப்பஃதென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணியிலக்கணம்

செய்யுளை அழகுபடுத்துவதற்காகப் புலவன் ஒருவன் கையாளும் அலங்காரங்களே அணியாகும்.

இன்று செய்யுள் நடையில் மட்டுமின்றி உரை நடையிலும் இவ் அணிகள் கையாளப்பட்டு வருவதைக் காணலாம்.

இவ் அணிகள் பின்வருமாறு இரண்டு வகைப்படும்

*01.* சொல்லணி

*02.* பொருளணி

**சொல்லணி**

செய்யுள் ஒன்றில் வரும் சொற்களை அழகுபடுத்துவதற்காகப் புலவன் ஒருவன் கையாளும் அலங்காரங்கள் சொல்லணிகள் எனப்படும்.

**உதாரணம் :** எதுகை, மோனை, பின்வருநிலை

**பொருளணி**

செய்யுளின் பொருளை அழகு படுத்துவதற்காகப் புலவன் ஒருவன் கையாளும் அலங்காரங்களே பொருளணி ஆகும். இப் பொருளணிகள் உவமையணி முதல் ஏதுவணி இறுதியாக 100 அணிகள் உண்டென்பது விசாகப்பெருமாளையரது அணியிலக்கணம் என்னும் நூலின் கருத்தாகும்.

**01. உவமையணி**

தெரியாத பொருள் ஒன்றை விளக்குவதற்குப் புலவன் ஒருவன் தெரிந்த பொருள் ஒன்றைக் கையாளுவானேயானால் அது உவமை அணி எனப்படும். மாறாகத் தெரிந்த பொருள் ஒனறைக் கையாண்டு புலவன் ஒருவன் தெரியாத பொருளை விளக்குவானேயானால் அதுவும் உவமை அணி எனப்படும். உதாரணம்

*01.* மலை அன்ன கொங்கை

*02.* மதி போலும் முகம் இங்கு ஒவ்வொரு அணிகளிலும் இரு பொருள்கள் உண்டு

i. தெரிந்த பொருள் (உபமானம்)

ii. தெரியாத பொருள் (உபமேயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபமானம்

உவமை அணி ஒன்றில் வருகின்ற தெரிந்த பொருள் எதுவோ அதுவே உபமானம் எனப்படும்.

**உதாரணம் :** பவளச் செவ்வாய்

இங்கு யாரோ ஒருவருடைய வாயை விளக்குவதற்கு யாவரும் அறிந்த பவளம் கையாளப்பட்டுள்ளது. எனவே பவளம் என்னும் தெரிந்த பொருள் உபமானமாகும்.

## உபமேயம்

உவமை அணி ஒன்றில் வருகின்ற தெரியாத பொருள் எதுவோ அதுவே உபமேயமாகும்.

**உதாரணம் :** மழைக்கை

இங்கு ஒருவருடைய கொடை கொடுக்கும் கையின் சிறப்பை விளக்குவதற்குத் தெரிந்த பொருளாகிய மழை கையாளப்பட்டுள்ளது. இம் மழை மூலம் விளக்கப்பட வேண்டிய பொருளாகக் கை உள்ளது. எனவே தெரியாத பொருளாகிய கையே உபமேயமாகும்.

## பொதுத்தன்மை

உவமை அணியொன்றில் வரும் உபமானத்திற்கும் உபமேயத்திற்கும் இடையே காணப்படும் ஒரே மாதிரியான இயல்புகள் அல்லது ஒத்த இயல்புகள் பொதுத்தன்மை எனப்படும்.

**உதாரணம் :** மதி போன்ற முகம்.

இங்கு தெரிந்த பொருள் மதி தெரியாத பொருள், முகம். மதி, என்பது சந்திரன் சந்திரனுக்குள்ள இயல்புகள் வெள்ளை, குளிர்மை, அழகு, ஒளிவீசுதல், வட்டம் ஆகிய இப்பண்புகளில் ஒன்றோ பலவோ இங்கு கூறப்பட்ட முகத்திற்கும் இருக்க வேண்டும். எனவே மேற்சொன்ன இப் பண்புகளே இவ் அணியின் பொதுத் தன்மையாகும்.

## உவமை உருபுகள்

உவமை அணி ஒன்றில் வரும் உபமானத்தையும் உபமேயத்தையும் இணைக்கும் சொல் உவமை உருபு எனப்படும்.

**உதாரணம் :** முத்தன்ன வெண்நகை

இங்கு வெண் நகை தெரியாத பொருள் முத்து தெரிந்த பொருள் இரண்டையும் இணைத்து நிற்கும் அன்ன என்பது உவமை உருபாகும்.

தொல்காப்பியம் உவமை உருபுகளாக போல, புரைய, அன்ன, மான, கடுப்ப, எய்ப்ப, நிகர்ப்ப, ஒப்ப, அனைய போன்ற நூற்றுக்கணக்கான உருபுகளைக் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உவமை அணி பற்றித் தண்டி**

பண்பும் தொழிலும் பயனுமென் றிபெற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்ந்
தொப்புமை தோன்றச் செப்புவதுமை

என உவமை பற்றி தண்டிலக்காரம் கூறி நிற்கின்றது. இதன் படி உவமை அணியானது வினை, பயன், பண்பு என்ற ஒன்றும் பலவும் காரணமாக தோன்றும் என்பது அவர் கருத்தாகும்.

மேலும் இவ் உவமை அணியானது வினை, பயன், மெய், உரு என்னும் நான்கின் அடிப்படையாகவும் பிறக்கும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும்.

**உவமை வகை**

**வினையடியால் பிறக்கும் உவமை**

**உதாரணம் :** புலிபோல் பாய்ந்தான்

இங்கு தொழில் ரீதியான உவமை பேசப்படுகின்றது.

**பயன் அடியாகப் பிறக்கும் உவமை**

**உதாரணம் :** மழை யன்ன தடக்கை

**பண்படியாகப் பிறக்கும் உவமை**

**உதாரணம் :** " பவளம் போன்ற செந்துவர் வாய்"

இங்கு பவளம் உபமானம் வாய் உபமேயம் இரண்டுக்கும் பொதுவான பண்பு செம்மை. இதனைால் இது பண்பு அடியாகப் பிறந்த உவமையாகும். இவ் உவமையானது பின்வருமாறு வகைப்படும். அவையாவன

01. விரிவுவமை
02. தொகையுவமை
03. இதர விதர வுவமை
04. சமுச்சயவுவமை
05. உண்மையுவமை
06. மறுபொருளுவமை
07. புகழ்தலுவமை
08. நிந்தையுவமை
09. நியம வுவமை
10. அநியமவுவமை
11. ஐயவுவமை
12. தோற்றவுவமை
17. விகாரவுவமை
18. மோகவுவமை
19. அபூதவுவமை
20. பல வயிற் போலியுவமை
21. ஒரு வயிற் போலியுவமை
22. கூடாவுவமை
23. பொது நீங்குவமை
24. மாலையுவமை
25. அற்புதவுவமை
26. சிலேடையுவமை
27. அதிசயவுவமை
28. விரோதவுவமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. இன்சொலுவமை
14. விபரீத வுவமை
15. இயம்புதல் வேட்கையுவமை
16. பல பொருளுவமை
29. ஒப்புமை கூட்டவுவமை
30. தற்குறிப்பேற்ற உவமை
31. விலக்குவமை
32. எதுவுவமை

**உவமை அணி வகை**

இவ் உவமை அணியானது பின்வருமாறு இரு வகைப்படும்.

01. விரியுவமை
02. தொகையுவமை

**விரியுவமை**

உபமானம், உபமேயம், பொதுத்தன்மை, உவமை உருபு என்ற நான்கு உறுப்புக்களும் ஒரு உவமை அணியில் விரிந்து நிற்குமாயின் அது விரிவுவமை எனப்படும்.

**உதாரணம் :** பால் போலும் இன் சொல்

உபமானம் - பால்
உபமேயம் - சொல்
உவமை உருபு - போலும்
பொதுத் தன்மை - இன் - இனிமை

**தொகையுவமை**

உபமேயம் தவிர்ந்த உபமானம், பொதுத்தன்மை, உவமை உருபு போன்றவற்றில் ஒன்று அல்லது பல மறைந்து வருமாயின் தொகையுவமை எனப்படும்.

**உதாரணம் :** கயற்கண்ணாள்

இங்கு உவமை உருபு பொதுத்தன்மை என்பன மறைந்து நிற்பதைக் காணலாம்.

**02. உருவக அணி**

உபமானத்திற்கும் உபமேயத்திற்குமிடையே எந்த விதமான வேறுபாடும் இல்லை எனக் கூறுவதும் உருவக அணியாகும்.

"அதுபோல் இது" என்பது உவமை அணியாயின் "அதுவே இது" எனக் கூறுவதே உருவகம் ஆகும்.

இவ்வணியைத் தண்டியாசிரியர் பின்வருமாறு வகைப்படுத்துவர்

01. தொகை உருவகம்
02. விரி உருவகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொகை உருவகம்

உருவக உறுப்புக்களாகிய ஆக, ஆகிய போன்ற உருபுகள் மறைந்து நிற்க அணியானது வருமாயின் அது தொகை உருவகம் எனப்படும்.

**உதாரணம் :** முகமதி

இங்கு முகமாகிய மதி என விரிந்து வர வேண்டும். ஆயினும் ஆகிய என்னும் உருபு மறைந்து வந்துள்ளதைக் காணலாம்.

### விரி உருவகம்

உருவக உருபுகளாகிய ஆக, ஆகிய, என்னும் உருபுகள் வெளிப்பட்டு நிற்க ஒரு அணியானது வருமாயின் அது விரி உருவக அணியாகும்.

**உதாரணம் :** புருவமாகிய வில்

இங்கு ஆகிய என்னும் உருபு வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம்.

### உருவகத்தின் வகை

உருவகத்தின் வகைகள் பற்றி தண்டியாசிரியர் கூறுமிடத்து அவற்றைப் பின்வருமாறு பிரிப்பர். அவையாவன.

*01.* தொகையுருவகம்
*02.* விரியுருவகம்
*03.* தொகை விரியுருவகம்
*04.* இயைபுருவகம்
*05.* இயை பிலி உருவகம்
*06.* வியநிலை உருவகம்
*07.* சிறப்புருவகம்
*08.* விரூபகம்
*09.* சமாதான உருவகம்
*10.* உருவக வுருவகம்
*11.* ஏகாங்க வுருவகம்
*12.* அநேகாங்கவுருவகம்
*13.* முற்றுவுருவகம்
*14.* அவய உருவகம்
*15.* அவயவி உருவகம்
*16.* உவம உருவகம்
*17.* ஏது உருவகம்
*18.* வேற்றுமை உருவகம்
*19.* விலக்கு உருவகம்
*20.* அவநுதி உருவகம்
*21.* சிலேடை யுருவகம்

### உருவகத்தின் பிறிதோர் வகை

உருவகத்தினை பின்வரும் இரண்டு விதமாக விசாகப் பெருமாளையர் அவர்கள் பிரித்துக் கூறியுள்ளார்.

*01.* ஒற்றுமை உருவகம்
*02.* செய்கை உருவகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்சொன்ன ஒற்றுமை உருவகமானது மேலும் மூன்று வகைப்படும் அவையாவன.

01. மிகையொற்றுமை உருவகம்

02. குறையொற்றுமை உருவகம்

03. அவையிலொற்றுமை உருவகம்

அதேபோல் செய்கை உருவகமானது பின்வருமாறு மூன்று வகைப்படும் அவையாவன.

01. மிகையதன் செய்கை உருவகம்

02. குறையதன் செய்கை உருவகம்

03. அவையிலதன் செய்கை உருவகம்

### 03. உயர்வு நவிற்சி அணி

ஒரு பொருளை அதற்குரிய சொல்லால் சொல்லாது கேட்போரை மகிழ்வித்தற் பொருட்டு அஃது இத்தன்மையானதன்று எனத் தெரிந்தும் உயர்த்திக் கூறுவது உயர்வு நவிற்சி அணி ஆகும்.

**உதாரணம் :** அற்பகத்தின் மன்னவனே நீயருள் செயாநிற்பக்
கற்பகத்தை யாம் விரும்போங்காண்

இங்கு மன்னரது அருள், திறம் உயர்த்திப் பேசப்பட்டுள்ளது.

### 04. பின்வரு விளக் கணி

செய்யுளின் முதலில் வந்த விளக்கச் சொல்லேனும் பொருளுமேனும் பின்வரும் பல இடங்களில் வருமேயானால் அதனைப் பின்வரு விளக்கணி என்பர். இதனைப் பின்வரும் மூன்று வகைப்படுத்தலாம்.

01. சொற் பின்வரு விளக்கணி

02. பொருட் பின்வரு விளக்கணி

03. சொற் பொருட் பின்வரு விளக்கணி

### சொற் பின்வரு விளக்கணி

செய்யுள் ஒன்றில் ஒரு சொல் மீண்டும் மீண்டும் வருமானால் அது சொற் பின்வரு விளக்கணி எனப்படும்.

**உதாரணம் :** மாரணமுங் கம்பெய்யு மான் கணமுங் கம்பெய்யும்"
வீரனின்று வாரா விடின்"

இங்கு கம்பெய்யும் என்னும் சொல் மீண்டும் வந்துள்ளதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொருட் பின்வரு விளக்கணி

ஒரே பொருள் குறிக்கும் பல சொற்கள் பல இடங்களில் ஒரு செய்யுளில் வருமேயானால் அது பொருட் பின்வரு விளக்கணி ஆகும்.

**உதாரணம் :** அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை மகிழ்ந்திதழ் விரிந்த
கருவிளை கொண்டன செங்காந்தள் குலை

மேற்சொன்ன பாடலில் அவிழ்ந்தன, அலர்ந்தன, நெகிழ்ந்தன விண்டன, விரிந்தன போன்ற ஒரு பொருட் சொற்களாகப் பல இடங்களில் வந்திருப்பதனால் இது பொருட் பின்வரு நிலையணியாகும்.

### சொற்பொருட் பின்வரு விளக்கணி

ஒரு சொல்லும் அது குறித்த பொருளும் பல இடங்களில் ஒரு செய்யுளில் வருமாயின் அது சொற் பொருட் பின்வரு நிலை அணி எனப்படும்.

உதாரணம் :- "மகிழ்ந்த நெடுஞ் சாதக மகிழ்ந்த தோகை
புகழ்ந்திடுகார் வானெழுந்த போது"

இங்கு மகிழ்ந்த என்னும் சொல் செய்யுளில் மீண்டும் வந்ததோடும் அதே பொருளிலிலும் வந்திருபேதைக் காணலாம். எனவே இது சொற் பொருட் பின்வரு நிலையணி எனப்படும்.

### 05. தன்மை அணி

இயல்பாகவே அமைந்துள்ள பல தன்மைகளும் வெளிப்படுமாறு ஒரு பொருள் பற்றித் தொடுக்கும் அணி இதுவாகும். இத் தன்மை அணியானது பின்வரும் நான்கு வகைப்படும்.

*01.* பொருட் தன்மை அணி
*02.* குணத் தன்மை அணி
*03.* சாதித் தன்மை அணி
*04.* தொழிற் தன்மை அணி

### பொருட் தன்மை அணி

ஒரு பொருளுக்குரிய பல விதமான இயல்புகளை உள்ளவாறே அலங்கரித்துக் கூறுவது பொருட்தன்மை அணியாகும்.

**உதாரணம் :** நீல மணிமிடற்ற னீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்ப னுதல்விழியன் - தோலுடையன்
கைம்மான் மறியன் கனல் மழுவன் கச்சாலை
எம்மா னிமையோர்க் கிறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு கச்சாலை எம்மான் என்பது இறைவனை குறித்தது இவ் இறைவனாகிய பொருளுக்குரிய இயல்புகளாகிய நீல மணிமிடறு, நீண்ட சடைமுடி நூலணிந்த மார்பு, நுதல் விழி போன்ற இயல்புகள் உள்ளவாறே தொடர்ச்சியாக அலங்கரித்துக் கூறப்பட்டமையால் இது பொருட் தன்மை அணியாகும்.

**குணத் தன்மை அணி**

ஒரு பொருளின் குணத்திற்குரிய பல விதமான தன்மைகளை உள்ளவாறே அலங்கரித்துக் கூறுவது குணத்தன்மை அணி ஆகும்.

**உதாரணம்** : உள்ளங் குளிர வுரோமஞ் சிலிர்த்து ரையுந்
தள்ள விழி நீரரும்பத் தான் மறந்தாள் - புள்ளலைக்குந்
தேந் தாமரை வயல் சூழ் தில்லை திருநடஞ்செய்
பூந் தாமரை தொழுத பொன்

இங்கே பெண்ணினுடைய குணமாக தன்னை மறந்தாள் என்னும் குணத்தைக் கூறி அதற்குரிய தன்மைகளாக உள்ளங் குளிர்தல் உரோமஞ் சிலிர்த்தல், கண்ணீர் அரும்பல் ஆகிய இயல்புகள் தொடர்ச்சியாக அலங்கரித்துக் கூறப்பட்டுள்ளமையைக் காணலாம்.

**சாதித் தன்மை அணி**

குறிப்பிட்ட ஒரு இனம் அல்லது சாதிக்குரிய பல விதமான தன்மைகளை உள்ளவாறே அலங்கரித்துக் கூறுவது சாதித் தன்மை அணி ஆகும்.

உதாரணம் ; பத்தித் தகட்ட கறைமிடற்ற பைவிரியுந்
துத்தித் வைநாத்துளையெயிற்ற - மெய்த்தவத்தோர்
ஆகத்தா னம்பலத்தா னாரா வமுதணங்கின்
பாகத்தான் சூடும் பணி

இங்கு பாம்பு, சாதியைக் குறித்து வந்தது. பாம்பின் குணங்களாக அகடுடமை, கறைமிடறுடமை படமெடுக்கும் தன்னை (பைவிரியும்) பிளவுபட்ட நாவுடைமை (வைநா) போன்ற தன்மைகள் தொடர்ச்சியாக அலங்கரிக்கப்பட்டுள்ளதால் இது சாதித் தன்மை அணியாகும்.

**தொழிற்தன்மை அணி**

ஒரு தொழிலுக்குரிய பலவிதமான தன்மைகளையும் உள்ளவாறே அலங்கரித்துக் கூறுதல் தொழிற் தன்மை அணி எனப்படும்.

**உதாரணம்** : சூழ்ந்து முரன்றணவி வாசந் துதைந்தாடிச்
தாழ்ந்து மது நுகர்ந்து தாதருந்தும் - வீழ்ந்த பெரும்
பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங் கொன்றை
வாசத்தார் நீங்காத வண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வண்டினது தொழிலாகத் தாது அருந்துதல், கூறப்பட்டு இத் தொழிலுக்குரிய தன்மைகளாக சூழ்ந்து முரலுதல், வாசந்துதைத்தல், தேன் நகருதல் முதலிய தன்மைகள் அழகாகக் கூறப்பட்டுள்ளது.

## 06. வேற்றுமைப் பொருள் வைப்பணி

தான் சொல்லக் கருதிய விடையத்தை வேறான ஒரு பொருள் மூலம் அழகு படச் சொல்வது வேற்றுப் பொருள் வைப்பணி எனப்படும்.

**உதாரணம்** : கடுகினுள் பெரியது காரம்

உருவில் சிறியவர் இடத்தும், அளப்பரிய சாதிக்கும் திறன் இருக்கும் என்பதே மேற்சொன்ன கூற்றின் பொருளாகும். இதை எடுத்தோத கடுகு என்கின்ற உலகத்தவர் அறிந்த பொருளை வேற்றுப் பொருளாகப் புலவர் காட்டியுள்ளார்.

அதாவது தான் விளக்க வந்த சிறப்புப் பொருளை தெளிவுபடுத்துவதற்கு புலவர் பொதுப் பொருள் ஒன்றின் மூலம் எடுத்து விளக்குவாரே ஆனால் அது வேற்றுப் பொருள் வைப்பணியாகும்.

**உதாரணம்** : பொய்யுரையா நண்பா புனைதேர் நெறி நோக்கிக்
கைவளை சேர்ந்தாவி கரைந்துருகுவார் - மெய் வெதும்ப
பூத்த கையுஞ் செங்காந்தன் பொங்கொலி நீர் ஞாலத்துத்
தீர்த்தகையார்க் கீதே செயல்.

இப்பாடலில் பொருட்படி இதன் சிறப்புப் பொருள் வருகின்ற தலைவனின் தேரினை எதிர்பார்த்து கைவளையல் கழன்று உயிர் வாடுகின்ற பெண்களின் உடம்பு வெதும்பும் படி காந்தள் மலர் பூத்திருக்கின்றது. இதனை விளக்க புலவர் இக் காந்தள் மலரின் செயல் உலகத்துத் தீயோருக்குரிய செயலே என யாவரும் அறிந்த பொது இயல்பை எடுத்துக் கூறி விளக்குகின்றார்.

இவ் வேற்றுப் பொருள் வைப்பணியானது பின்வருமாறு எட்டு வகைப்படும் அவையாவன

01. முழுவதுஞ் சேறல்
02. ஒரு வழிச் சேறல்
03. முரணித் தோன்றல்
04. சிலேடையின் முடித்தல்
05. கூடாவியற்கை
06. கூடுமியற்கை
07. இருமையியற் கை
08. விபரீதப் படுத்தல் என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. வேற்றுமை அணி

வெளிப்படையாகவோ அல்லது குறிப்பாகவோ ஒத்த தன்மையினையுடைய இரு பொருள்கள் தம்முள் வேறுபாடு தோன்ற வருமாயின் அதுவும் வேற்றுமை அணியாகும்.

**உதாரணம்** : சுற்றுவிற் காமனுந் சோழர் பெருமானாங்
கொற்றப் போர்க் கிள்ளியுங் கேழொவ்வார் - பொற்றொடியே
ஆழி யுடையோன் மகன் மாயன் செய்யனே
கோழி யுடையான் மகன்.

இங்கே காமனுக்கும் சோழனுக்கும் கருமை, செம்மை, நிறங்களால் மாயன் செய்யன் என்னும் வேற்றுமை கூறப்பட்டது. இவ் வேற்றுமை பின்வருமாறு வகைப்படும்.

01. குண வேற்றுமை
02. பொருள் வேற்றுமை
03. சாதி வேற்றுமை
04. தொழில் வேற்றுமை
05. விலக்கியல் வேற்றுமை
06. சிலோடை வேற்றுமை எனப் பல வகைப்படும்.

மாறாக அணியில் வரும் உபமானம், உபமேயம் இரண்டிலும் ஒன்றினை விசேடித்து சொல்லுதல் வேற்றுமை அணியாகும்.

**குறிப்பு** : அதாவது இரு பொருட்களின் வேறுபாட்டையும் எடுத்துக் கூறி ஒன்றை உயர்த்திப் பேசுவது இதன் பொருளாகும்.

**உதாரணம்** : மலிதேரான் கச்சியும் மாகடலும் தம்முள்
ஒலியும் பெருமையும் மொக்கும்
கச்சிபடுவ கடல் படா மலி தேரான் கச்சி
கடல் படுவ வெல்லாம் படும்

இங்கு கச்சியும் மாகடலும் ஒப்பிட்டு கச்சி சிறப்பிக்கப்பட்டது.

## 08. தற்குறிப்பேற்ற அணி

இயற்கை நிகழ்வின் மீது கவிஞன் ஒருவன் தன் கருத்தை ஏற்றிக் கூறுவானேயானால் அது தற்குறிப் பேற்ற அணியாகும். இதனை தன் + குறிப்பு +ஏற்றல் + எனப் பிரித்து பொருள் கொள்ளலாம்.

இவ் அணியில் வரும் இயற்கை நிகழ்வோடு சம்பந்தப்பட்ட பொருளானது அசையக் கூடியதா அல்லது அசைய முடியாததா? என்பதை அடிப்படையாகக் கொண்டு இத் தற்குறிப்பேற்ற அணி இருவகைப்படும்.

அவையாவன : 01. பெயர் பொருட் தற்குறிப் பேற்ற அணி
02. பெயராப் பொருட் தற் குறிப்பேற்ற அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் பொருட் தற்குறிப்பேற்ற அணி

இயற்கை நிகழ்வில் குறிப்பிடப்படும் பொருள் அசையக் கூடிய பொருளாக இருக்க இந்நிகழ்வின் மீது கவிஞன் தன்னுடைய கருத்தை ஏற்றிக் கூறுவானானால் அது பெயர் பொருட் தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

**உதாரணம் :** மண்படு தோட் கிள்ளி மதயானை மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால் - விண்படர்ந்து
பாயுங் கொ லென்று பனிமதியம் போல் வதூ உந்
தேயுந் தெளி விசும்பினின்று

இங்கு சந்திரன் ஆகாயத்தில் தேய்தல் இயற்கை நிகழ்வு. அந் நிகழ்வின் மீது கவிஞர் சோழனுடைய மதயானை பகையரசரின் வெண்குடையைச் சிதைத்த காட்சியை கண்டு அஞ்சியே அது தேயும் என்றார் இங்கு சந்திரன் அசையக் கூடிய பொருளாகும்.

## பெயராப் பொருட் தற்குறிப் பேற்றம்

கவிஞர் கூறும் இயற்கை நிகழ்வோடு சம்பந்தமுடைய பொருள் அசையமுடியாத பொருளாக இருக்க கவிஞர் அப்பொருள் மீது தன் கருத்தை ஏற்றிக் கூறுவார் ஆயின் அது பெயராப் பொருட் தற்குறிப் பேற்றம் எனப்படும்.

**உதாரணம் :** வேனில் வெயிற்குலர்ந்த மெய் வறுமை கண்டிரங்கி
வானின் வளஞ் சுரந்த வண்புயற்குத் - தானுடைய
தாதுமே தக்க மதுவும் தடஞ்சினையாற்
போதுமீ தேந்தும் பொழில்

இங்கு கூறப்படும் இயற்கை நிகழ்வு சோலைகளில் உள்ள தாவரங்கள் பூக்களை மேலேந்தி தேன்களைக் கொண்டிருத்தல் இந் நிகழ்வின் மீது கவிஞர், அவை வறுமை தீர்த்த முகிலுக்கு கைம்மாறாகவே தேனை ஏந்தி நிற்கின்றது என்கிறார். இங்கு கூறப்பட்ட சோலை அசைய முடியாத பொருளாகும்.

## 09. முரண் அணி அல்லது விரோத அணி

மாறுபட்ட சொல்லாலாவது அல்லது பொருளாலாவது மாறுபாட்டுத் தன்மை தோன்றச் சொல்வது விரோத அணி அல்லது முரண் அணியாகும். இவ் விரோத அணி பின்வருமாறு இரண்டு வகைப்படும்.

**01.** சொல் விரோதம்

**02.** பொருள் விரோதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சொல் விரோதம்

ஒன்றுக் கொன்று மாறுபட்ட சொற்களை வைத்து பாடலை அலங்கரிப்பது சொல் விரோதமாகும்.

**உதாரணம் :** "காலையு மாலையுங் கைகூப்பிக் கா றொழுதான்
மேலை வினையெல்லாங் கீழவாம்"

### பொருள் விரோதம்

மாறுபட்ட பொருளைத் தருகின்ற சொற்களை அமைத்து செய்யுளை அலங்கரித்தல் பொருள் விரோதம் ஆகும்.

**உதாரணம் :** சோலை பயிலுங் குயின் மழலை சோர்ந்தடங்க
ஆலு மயிலினங்க ளார்த் தெழுந்த - ஏலம்

இங்கு குயில்களுக்கு அடங்குதலும் மயில்களுக்கு ஆர்த்தலும் ஆகிய எதிரெதிர்ப் பொருளைத் தருகின்ற சொற்கள் கூறப்பட்டுள்ளன.

### 10. புகழாப் புகழ்ச்சியணி

பழிப்பது போலும் தன்மையில் ஒரு பொருளுக்கு மேம்பாடு தோன்றச் சொல்வது புகழாப் புகழ்ச்சி அணியாகும்.

**உதாரணம் :** போர் வேலின் வென்றதூஉம் பல்புகழாற் போர்த்ததூ உம்
தார் மேவு திண்புயத்தாற் றாங்கு வதூ உம் - நீர் நாடன்
தேரடிக் கூர் வெம்படையாற் காப்பதூ உஞ் செங்கண்மால்
ஓரடிக்கீழ் வைத்த உலகு.

இங்கு விஸ்ணுவினால் ஓரடியால் அளக்கப்பட்ட உலகையே சோழன் வென்றான் என வெளிப்படையாகப் பழிக்கப்படுவது போலத் தோன்றினும் இறைவனாகிய விஸ்ணுவால் அளக்கப்பட்டதால் அந் நிலத்திற்கு உரிய பெருமை காரணமாக சோழனுக்கும் பெருமை உண்டாயிற்று எனக் கூறப்படுகின்றது.

### 11. வஞ்சகப் புகழ்ச்சி அணி

இவ் அணி பின்வருமாறு மூன்று வகைப்படும் என்பர் விசாகப் பெருமாளையர்

#### 1. பழிப்பினால் புகழ்ச்சி தோன்றல்

இங்கு வெளிப்படையாகப் பழிக்கப்பட்ட பொருள் மறைமுகமாகப் புகழ்ந்து பேசப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் : பேசுகொலை யாதிப் பெரும்பா தகர்தமையும்
தேசமிகு வானுலகிற் சேர்க்கின்றாய் - வீசுதிரை
பின்னியெழு மோதை பெரிதுறுபா கீரதியே
நின்னறிவென் னென்பே னியான்

கொலைஞர் தொடக்கம் மாபாதகர் வரைக்கும் சுவர்க்க லோகத்திற்கு அனுப்புவதால் பழித்துக் கூறப்பட்டது போலத் தோன்றிடினும் அவர்களின் இழிவைக் கூடக்கருதாது அவர்களையும் சுவர்க்கத்திற்கு அனுப்புகின்ற நல்ல எண்ணத்தினை உடையதால் இது மறைமுகமான புகழ்ச்சி எனலாம்.

### புகழ்ச்சியாற் பழிப்புத்தோன்றல்

வெளிப்படையாகப் புகழ்வது போலத் தோன்றினும் மறைமுகமாகப் பழித்துக் கூறுதல் இதன்பாற்படும்.

உதாரணம் : எற்காகத் தூதரசன் புடையேகி யிளங்கொடிநீ
அற்கா ரளகங் குலையமெய் வேர்வை யரும்பவந்தோ
பற்கா யமுநகத் தூறு நனியுறப் பட்டு நொந்தார்
நிற்கா முறைசெய்கை மாறுமுண் டோவிந்த நீண்நிலத்தே

இதில் தனக்காக நொந்தாய் என்பதன் மூலம் புகழ்ந்து பேசப்பட்டாலும் எனக்காக அன்று நீ புணர்தற்குப் போயினை என்ற அடியின் மூலம் இச் செயற்பாட்டின் இழிவு கூறப்பட்டுள்ளது.

### புகழ்ச்சியால் புகழ்ச்சி தோன்றல்

இங்கு ஒரு பொருளைப் புகழ்வதன் மூலம் அதனோடு சம்பந்தமுடைய பிறிதொரு பொருள் புகழப்படுதல்

உதாரணம் : சீரார்ந் திலகுசிறைச் செந்தார்ப் பசுங்கிள்ளை
வாரார் முலையாய்நின் வாயிதழ்க்கு - நேராகும்
கொவ்வைக் கனிநுகர்தற் குத்தவமென் செய்ததோ
செவ்வைத் திறத்திற் றெரிந்து

இங்கு கிளியின் அழகு சிறப்பிக்கப்பட்டு அது உண்ணும் கொவ்வைப் பழமும் சிறப்பிக்கப்பட்டு அதன் மூலம் வாய் இதழ் புகழப்பட்டமையைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லணிகள்

## 01. எதுகை அணி

செய்யுள் சீர்களிலேனும் அல்லது அடிகளிலேனும் முதலாவது எழுத்து அளவொத்து நிற்க இரண்டாவது எழுத்தானது ஒரே எழுத்தாக அமையுமாயின் அது எதுகை அணி எனப்படும்.

இங்கு முதலாவது எழுத்து அளவொத்து நிற்றல் என்னும் போது எல்லா முதல் எழுத்துக்களும் குறில் எழுத்தாகவோ அல்லது நெடில் எழுத்தாகவோ நிற்றல் என்பதே இதன் பொருளாகும். செய்யுள் சீர்களில் எதுகை அணிக்கு

**உதாரணம் :** இன்று கொல் அன்று கொல் என்று கொல்
என்றெண்ணாது பின்றையே நின்றது

இங்கு "ன்" என்பது செய்யுள் சீர்களில் எதுகையாக வந்துள்ளமையைக் காணலாம். செய்யுள் அடிகளில் எதுகை அணிக்கு

**உதாரணம் :** துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்த கூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார் மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்காற் போல வரும்.

இங்கு செய்யுள் அடிகளில் "க" என்பது எதுகையாக வந்துள்ளமையைக் காணலாம்.

## 02. மோனை அணி

செய்யுள் சீர்களில் வரும் முதல் எழுத்தானது ஒரே எழுத்தாக அமைந்து காணப்படுமாயின் அது மோனை அணியாகும்.

**உதாரணம் :** கானகத்து காதலியை காரிருளில் கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ .....

இங்கு முதலாவது அடியில் 'கா' என்பது எல்லா சீர்களிலும் ஒன்றி வருவதால் இது மோனையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03. இயைபணி**

செய்யுள் ஒன்றில் வருகின்ற இறுதி எழுத்து ஒன்றிவர அதாவது ஒரே மாதிரியாக வர செய்யுள் செய்யப்படுமாயின் அது இயைபணியாகும்.

**உதாரணம் :** அங்கட் கமலத் தலர்கமல மேயீரு நீரே போலும்
வெங்கட் கடிகை விடவரவின் மேயீரு நீரே போலும்
திங்கட் சடை யீருந்தில்லை வனத்துள்ளீரே நீரே போலும்

இங்கு எல்லா அடிகளும் "ம்" என்னும் எழுத்தில் முடிவதா இது இயைபணியாகும்.

**04. சிலேடை அணி**

ஒரு சொற்றொடரை உச்சரிக்கின்ற போது ஒரு வடிவைத் தருகின்ற சொற்றொடர் பல பொருளுடையதாய் வருமாயின் அது சிலேடை அணி ஆகும்.

**உதாரணம் :** தோட்டத்திலாடு

இங்கு உச்சரிக்கின்ற போது தோட்டத்திலாடு என்னும் ஒரு வடிவைத் தருகின்ற போதும் இதன் பொருள் தோட்டத்தில் ஆடும் படி கட்டளை இடுவதாகவும் அல்லது தோட்டத்திலேயே ஆடுஇருக்கின்றதாகவும்இரு பொருள்களைத் தருகின்றது.

இச் சிலேடை அணியானது பின்வருமாறு இரண்டு வகைப்படும். அவையாவன.

*01.* செம்மொழிச் சிலேடை
*02.* பிரிமொழிச் சிலேடை

**செய்யுள் உதாரணம் :** செங்கரங்க ளானிரவு நீங்குந் திறம் புரிந்து
பங்கய மாதர் நலம்பயில பொங்குதயத்
தோராழி வெய்யோ னுயர்ந்த நெறி யொழுகும்
நீராழி நீணிலத்து மேல்"

இப் பாடல் சோழனுடைய சிறப்பையும் சூரியனின் சிறப்பையும் ஒரே தன்மையை சொற்றொடர்களின் மூலம் கூறி நிற்கிறது.

மேற் சொன்ன வகைகள் தவிர இச் சிலேடை அணியானது.

*01.* ஒரு வினைச் சிலேடை
*02.* பல வினைச் சிலேடை
*03.* முரண் வினைச் சிலேடை
*04.* நியமச் சிலேடை
*05.* நியம விலக்குச் சிலேடை
*06.* விரோதச் சிலேடை
*07.* அவிரோதச் சிலேடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. யமகம் அல்லது மடக்கு அணி

எழுத்துக்களின் கூட்டம் அல்லது சொற்கள் இடைவிட்டும் இடைவிடாதும் வந்து வேறு பொருள் தருமாயின் அது மடக்கு அல்லது யமகம் எனப் பொருள்படும்.

மடக்கு என்பது மடங்கி வருதலுடையது

உதாரணம் :- "துறைவா துறைவார் பொழிற்றுணைவர்
நீங்க உறைவர்க்கு முண்டாங் கொல் ...."

இங்கு துறைவா, துறைவார் என்பன இடைவிடாது வந்து வேறு பொருள் தந்தன. ஆதலால் இது மடக்கு ஆகும்.

உதாரணம் :- நினையா நினையா நிறைபோ யகலா
வினையா வினையா யிலமால் ....."

இம் மடக்கானது பின்வருமாறு ஏழு வகைப்படும்

01. ஆதி மடக்கு
02. இடை மடக்கு
03. கடை மடக்கு
04. ஆதியோடிடை மடக்கு
05. ஆதியோடு கடை மடக்கு
06. இடையோடு கடை மடக்கு
07. முழுது மடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினா விடைகள்

**01. எழுத்து என்றால் என்ன?**

மொழிக்கு முதற் காரணமாகிய அணுத் திரளின் கூட்டமே எழுத்தாகும்.

**02. எழுத்து எத்தனை வகைப்படும்? அவை எவை?**

இரண்டு வகைப்படும்

i. முதல் எழுத்து

ii.சார்பெழுத்து

**03. எழுத்து இலக்கணம் எத்தனை பிரிவுகளைக் கொண்டது?**

| | | | |
|---|---|---|---|
| i. எண் | ii. பெயர்) | iii. முறை | iv. பிறப்பு |
| v. உருவம் | vi. மாத்திரை | vii. முதல் | viii. ஈறு |
| ix. இடைநிலை | x. போலி | xi. பதம் | xii. புணர்பு |

**04. சார்பெழுத்தின் வகைகள் எத்தனை? அவை எவை?**

10 வகைப்படும்

| | | | |
|---|---|---|---|
| i. | உயிர் மெய் | - | 216 |
| ii. | முற்றாயிதம் | - | 08 |
| iii. | உயிரள பெடை | - | 7x3=21 |
| iv. | ஒற்றள பெடை | - | 42 |
| v. | குற்றியலுகரம் | - | 36 |
| vi. | குற்றியலிகரம் | - | 37 |
| vii. | ஐகாரக் குறுக்கம் | - | 03 |
| viii. | ஔகாரக் குறுக்கம் | - | 01 |
| ix. | மகரக் குறுக்கம் | - | 03 |
| x. | ஆய்த குறுக்கம் | - | 02 |
| | | | 369 |

**05. முதலெழுத்து எத்தனை வகைப்படும்? அவை எவை?**

இரண்டு வகைப்படும்

i. உயிரெழுத்து (அ - ஔ வரை 12)

ii. மெய்யெழுத்து (க் - ன் வரை 18)

**06. உயிரெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?**

1. உயிர்க் குறில் எழுத்து (குற்றெழுத்து) அ, இ, உ, எ, ஒ - 5)
2. உயிர் நெடில் எழுத்து (நெட்டெழுத்து) ஆ, ஈ, ஊ, ஓ, ஔ, ஏ, ஐ - 7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. சுட்டெழுத்துக்கள் யாவை? அவற்றின் வகைகள் எவை?**

1. அகச் சுட்டு உ+ம் - அவன், இவன், உவன்
2. புறச் சுட்டு உ+ம் - அப்பசு, உப்பசு, இப்பசு

பிறிதோர் வகை

அண்மைச் சுட்டு - இவன் - இப்பசு

சேய்மைச் சுட்டு - அவன் - அப்பசு

இடைநிலை சுட்டு - உவன் - உப்பசு

**08. வினா எழுத்துக்கள் எவை?**

எ, யா - சொல்லின் முதலில் வரும்

ஆ, ஓ - சொல்லின் கடைசியில் வரும்

ஏ - முதலிலும் கடைசியிலும் வரும்

**09. மெய் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?**

3 வகைப்படும்

| | | |
|---|---|---|
| வல்லினம் | - க், ச், ட், த், ப், ற் | - 06 |
| மெல்லினம் | - ங், ஞ், ண், ந், ம், ன் | - 06 |
| இடையினம் | - ய், ர், ல், வ், ழ், ள் | - 06 |

**10. இன எழுத்துக்கள் எவை?**

| | | | |
|---|---|---|---|
| க் - ங் | த் - ந் | அ - ஆ | ஔ - உ |
| ச் - ஞ் | ப் - ம் | இ - ஈ | எ - ஏ |
| ட் - ண் | ற் - ன் | உ - ஊ | ஒ - ஓ |
| | | | ஐ - இ |

**11. இன எழுத்துக்கள் இல்லாத கூட்டம் எது?**

இடையினம் - ய், ர், ல், வ், ள், ழ்

**12. இதழ் குவிந்த உயிர் எழுத்துக்கள் எவை?**

ஊ, உ, ஒ, ஓ, ஔ

**13. இதழ் குவியாத உயிர் எழுத்துக்கள் எவை?**

அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ

**14. முன், பின், இடை, உயிர் எழுத்துக்கள் எவை?**

முன் உயிர் - இ, ஈ, எ, ஏ

பின் உயிர் - உ, ஊ, ஒ, ஓ

இடை உயிர் - அ, ஆ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**15. மேல், கீழ், நடு உயிர் எழுத்துக்கள் எவை?**

மேல் உயிர் - இ, ஈ, உ, ஊ

கீழ் உயிர் - அ, ஆ

நடு உயிர் - எ, ஏ, ஒ, ஓ

**16. இ, ஈ, எ, ஏ ஆகிய 5 எழுத்துக்களும் எவ்வெவ் எழுத்துக்களின் முன்னர் வருகின்ற போது ஒலி வேறுபாட்டை ஏற்படுத்துகின்றன?**

ட், ண், ள், ழ் உயிர் ஏறிய நகரம்

உதாரணம் - இடம், வீண், வெறுப்பு, ஏழை, எளிமை

**17. கிரந்த எழுத்துக்கள் எவை?**

ஜ, ஷ, ஸ, ஹ, ஸ்ரீ, க்ஷ

**18. ஒலி அடிப்படையில் மெய் எழுத்துக்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?**

1. ஈரிதழ் ஒலிகள் - ப், ம்
2. உதட்டுப் பல் ஒலி - வ்
3. நுனி அண்ண ஒலி - ல், ர், ற், ன்
4. பல் ஒலி - த், ந்
5. வளை நா ஒலிகள் - ட், ண், ழ், ள்
6. அண்ண ஒலிகள் - ச், ஞ், ய்
7. கடை அண்ண ஒலி - க், ங்

**19. வல்லின மெய் எழுத்துக்களை ஒலி அடிப்படையில் எவ்வாறு பாகுபடுத்தலாம்**

க் - கடை அண்ண வெடிப்பொலி

ச் - அண்ண வெடிப்பொலி

ட் - வளைநாவெடிப்பொலி

த் - பல் வெடிப்பொலி

ப் - ஈரிதழ் வெடிப்பொலி

ற் - நுனி அண்ண வெடிப் பொலி

**20. மெல்லின மெய் எழுத்துக்களை ஒலி அடிப்படையில் எவ்வாறு பாகுபடுத்தலாம்?**

ங் - கடை அண்ண மூக்கொலி

ஞ் - அண்ண மூக்கொலி

ண் - வளைநா மூக்கொலி

ந் - பல் மூக்கொலி

ம் - ஈரிதழ் மூக்கொலி

ன் - நுனி அண்ண மூக்கொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21. இடையின எழுத்துக்களை ஒலி அடிப்படையில் வகைப்படுத்துக?**

ர் - வருடொலி

ற் - ஆடொலி

ய், வ் - அரை உயிர்

ல், ள், ழ் - மருங்கொலி

**22. உயிரளபெடைக்கு ஒரு உதாரணம் தருக?**

i. உறாஅர்க்கு

ii. படாஅ

**23. உயிரளபெடை எத்தனை வகைப்படும்? அவை எவை?**

i. இன்னிசை அளபெடை

ii. சொல்லிசை அளபெடை

**24. ஒற்றளபெடைக்கு உதாரணம் தருக?**

i. மடங்ங் கலந்த

ii. எங்ங் இறைவன்

**25. உயிரளபெடையில் அளவெடுக்கும் எழுத்துக்கள் எத்தனை? அவை எவை?**

7

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

**26. ஒற்றளபெடையில் அளவெடுக்கும் எழுத்துக்கள் எத்தனை? அவை எவை?**

11

ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள்

**27. குற்றியலுகரத்தின் வகைகள் யாவை?**

வன் தொடர்க்குற்றியலுகரம் - பட்டு, உப்பு

மென் தொடர்க்குற்றியலுகரம் - பஞ்சு, வண்டு

இடைத் தொடர்குற்றியலுகரம் - தெள்கு, சார்பு

நெடித் தொடர்க்குற்றியலுகரம் - ஆடு, ஈடு

ஆய்தத் தொடர்க்குற்றியலுகரம் - எஃகு, கஃசு

உயிர்த் தொடர்க்குற்றியலுகரம் - வரகு, படகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28. எழுத்துக்குரிய மாத்திரைகளைத் தருக?**

நெடில் எழுத்து - 2 மாத்திரை

குறில் எழுத்து, ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மெய் எழுத்து - 1 மாத்திரை

குற்றிய லிகரம், குற்றிய லுகரம், ஆய்தம் - 1/2 மாத்திரை

மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் - 1/4 மாத்திரை

**29. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எவை?**

12 உயிர் எழுத்துக்கள்

க, ச, த, ப, ந, ஞ, த, ம, ய, வ ஆகிய 10 உயிர் மெய் எழுத்துக்களும்

உயிர் மெய்களுள்

உ, ஊ, ஒ, ஓ, உடன் வ் சேர்ந்து வரும்

அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ, உடன் ய் சேர்ந்து வரும்

அ, ஆ, எ, ஒ, உடன் ஞ் சேர்ந்து வருதல்

அ, இ, உ, யா, எ, என்னும் எழுத்துக்களுக்குப் பின் அகரத்தோடு கூடி ங் வருதல்.

**உதாரணம் :** அங்ஙனம்

**30. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் எவை?**

1. பன்னிரண்டு உயிர் எழுத்துக்கள்
2. பன்னிரண்டு உயிரும் மெய்யோடு சேர்ந்து வரும்
3. ஞ், ண், ந், ம், ன் ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொரு மெய்யும் வரும்.
4. குற்றியலுகரமும் வரும்.

**31. இடைநிலை எழுத்துக்கள் எவை?**

* க், ச், த், ப் தவிர்ந்த ஏனைய 14 மெய்களும் மற்ற மெய்களுடன் மயங்கி வரும்.
* ர், ழ் தவிர்ந்த ஏனைய 16 மெய்களும் தம்முடன் தாம் மயங்கி இடையில் வரும்.

**32. உடனிலை மெய் மயக்கம் என்றால் என்ன? உதாரணம் தருக?**

ர், ழ், தவிர்ந்த ஏனைய 16 மெய்களும் தம்முடன் தாம் மயங்கி சொல்லின் இடையில் வருதல் உடனிலை மெய்மயக்கமாகும்.

**உதாரணம் :** அங்ஙனம், வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**33. வேற்று நிலை மெய் மயக்கம் என்றால் என்ன?**

க, ச, த, ப தவிர்ந்த 14 மெய்களும் பிறவற்றோடு சொல்லின் இடையில் மயங்கி வருதல் அது வேற்று நிலை மெய்மயக்கமாகும்.

**உதாரணம் :** கண்டு, வெண்பல்

**34. போலி என்றால் என்ன? உதாரணம் தருக?**

ஒரு சொல்லில் ஓர் எழுத்து நிற்க வேண்டிய இடத்தில் மற்றோர் எழுத்து நிற்பினும் பொருள் மாறுபடாது காணப்படுமாயின் போலியாகும்.

**உதாரணம் :** நிலம் - நிலன்

வண்டு - வண்டர்

பந்தல் - பந்தர்

**35. எழுத்துக்களுக்குரிய சாரியைகள் எவை?**

மெய்யெழுத்துக்கள் 'அ' என்னும் சாரியை பெறும்.

**உதாரணம் :** க, ஞ, ட

உயிர் நெடில் எழுத்துக்கள் 'காரச்' சாரியை பெறும்

**உதாரணம் :** ஆகாரம், ஓகாரம்

ஐ, ஔ என்பன கான், காரச் சாரியை இரண்டும் பெறும்

**உதாரணம் :** ஐகாரம், ஐகான்

உயிர் குறிலும், உயிர் மெய்க் குறிலும் அகரச் சாரியை கான் சாரியை, காரச் சாரியை மூன்றையும் பெறும்.

**உதாரணம் :** அகரம், அகாரம், அஃகான்

**36. பதம் என்றால் என்ன?**

ஓரெழுத்தாலாகியோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்தாலாகியோ பொருள் தருமாயின் அது பதம் எனப்படும்.

**37. பதம் எத்தனை வகைப்படும்? அவை எவை, உதாரணம் தருக?**

இரண்டு வகைப்படும்

பகுபதம் - நிலம், மரம்

பகாப்பதம் - அறிஞன், நடந்தான்

**38. பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை எவை?**

இரண்டு வகைப்படும்

பெயர்ப் பகுபதம் - அறிஞன்

வினைப் பகுபதம் - நடந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**39. பகுபத உறுப்புக்கள் எவை?**

பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்

**உதாரணம் :** வந்தனன்

வா + த் + த் + அன் + அன் - விகுதி

பகுதி சந்தி இடைநிலை சாரியை

இங்கு வா என்பது வ என மாறியுள்ளது. இது விகாரம்

**40. தெரிநிலை வினை முற்றுக்களின் பகுதிகளாக வரக்கூடிய சொற்கள் எவை?**

நட, வா, மடி, சீ, விடு, கூ, நொ, வே, வை, பார், செல், வௌ, போ, உண், பொருந், தேய், உரிஞ், வாழ், கேள், வவ், திரும், திண்

**41. தெரிநிலை வினை முற்று விகுதிகள் எவை?**

அன், ஆன், அள், ஆள், அர், ஆர், பம்மார், அ, ஆ, டு, து, று, என், ஏன், அல், அம், ஆம், எம், ஏம், ஓம், ஓடு, கும், டும், தும், றும், ஆல், ஐ, கு, மின், இர், ஈ, ஈயர், க, ய, உம்

**42. படர்க்கை வினை விகுதிகள் எவை?**

அன், ஆன், அள், ஆள், அர், ஆர், வ, மார்

**43. தன்மை வினை விகுதிகள் எவை?**

கு, று, என், ஏன், அல், கும், றும், டும், றும், டு, எம், அம், ஆம், ஓம், ஓம், து அன், தும்

**44. முன்னிலை வினை விகுதிகள் எவை?**

ஐ, மின், இ, ஆய், இர், ஈர்

**45. வியங்கோள் வினை விகுதிகள் எவை?**

க, ய, ஈயர்

**46. பெயர் எச்ச விகுதிகள் எவை?**

அ, உம்

**47. வினையெச்ச விகுதிகள் எவை?**

உ, ய், இ, பு, ஆ, ஊ, என், அ, ஆல், கால், வான், பாக்கு, கடை, கண் வழி, கிடக்க, உம், மை, மேல், து, இல், இயர், பான், மல், இன்

**48. தொழிற்பெயர் விகுதிகள் எவை?**

தல், அல், அம், ஐ, வை, கை, கு, பு, வு, வி, தி, சி, உள், காடு, பாடு, இல், அரவு, ஆனை, மை, து, ஆல், மதி, அயம், மானம்

**49. பண்புப் பெயர் விகுதிகள் எவை?**

மை, ஐ, சி, பு, இல், கு, றி, அம், பம், றி, று, நர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**50. எதிர் மறை இடைநிலை எவை?**

இல், அல், ஆ

**51. இடைநிலை எத்தனை வகைப்படும், அவை எவை?**

இரண்டு வகைப்படும்

1. பெயர் இடைநிலை

2. வினை இடைநிலை - த், ட், ற், ன்

**52. இறந்த கால நிகழ்கால எதிர்கால இடைநிலைகள் எவை?**

இறந்த கா இடைநிலை - த், ட், ற், ன்

நிகழ்கால இடைநிலை - ஆநின்று, கின்று, கிறு

எதிர்கால இடைநிலை - ப், வ்

**53. காலம் காட்டும் விகுதிகள் எவை?**

து, தும் - இறந்த காலம், எதிர்காலம், காட்டும்

டு, டும் - இறந்த காலம் காட்டும்

கு, கும் - எதிர்காலம் காட்டும்

மின், இ, மார் - எதிர் காலம் காட்டும்

ப - இறந்த காலம், எதிர்காலம்

**54. தமிழ்க்கேயுரிய சிறப்பு எழுத்துக்கள் எவை?**

ற, ன, ழ, எ, ஒ, என்னும் ஐந்தும் உயிர், மெய், உயிரளபெடை நீங்க வரும் சார்பெழுத்து எட்டு

**55. புணர்ச்சியின் இரு வகைகளும் எவை?**

1. வேற்றுமைப் புணர்ச்சி

2. அல்வழிப்புணர்ச்சி

**56. வேற்றுமைப் புணர்ச்சி என்றால் என்ன?**

வேற்றுமை உருபுகள் மறைந்தோ அல்லது வெளிப்பட்டோ நிற்க இரு சொற்கள் புணருமாயின் அது வேற்றுமைப் புணர்ச்சி ஆகும்.

உதாரணம் : நிலங்கடந்தான் ~ நிலத்தைக் கடந்தான்

**57. அல் வழிப் புணர்ச்சி என்றால் என்ன?**

வேற்றுமை அல்லாத வழியில் சொற்கள் புணரும் புணர்ச்சி அல்வழிப் புணர்ச்சி ஆகும்.

உதாரணம் : கொல்யாணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**58. தற்காலத்தில் சொற்களின் இலக்கணத் தொழிற்பாட்டை ஒட்டி சொற்களை எத்தனை வகையாகப் பிரிப்பர்?**

ஐந்து வகையாகப் பிரிப்பர்

பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், பெயரடை, வினையடை

**59. பண்டைய தமிழ் இலக்கண நூல்கள் சொற்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?**

நான்கு வகையாகப் பிரித்தன

பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச்சொல்

**60. பெயர்ச் சொல்லின் பண்புகள் எவை?**

வேற்றுமை உருபுகள் ஏற்கும்

நல்ல புதிய போன்ற பெயரடைகளை ஏற்கும்

ஒரு, இரு போன்ற எண் அடைகளை ஏற்கும்

ஆக, ஆகி என்னும் விகுதிகளை பெற்று வினையடைகளாக வரும்.

**61. பெயர்ச்சொற்களை தற்காலத் தமிழின் அடிப்படையில் எத்தனை வகைப்படுதுவர்? அவை எவை?**

1. மாற்றுப் பெயர்
2. தொழிற் பெயர்
3. ஆக்கப் பெயர்
4. வினையாலணையும் பெயர்
5. கூட்டுப் பெயர்

**62. மாற்றுப் பெயர் என்றால் என்ன?**

ஒரு பெயர்ச் சொல்லுக்குப் பதிலாக பயன்படுத்தக் கூடிய பெயர்சொல் மாற்றுப் பெயர் எனப்படும். இரண்டு வகைப்படும்

01. மூவிட மாற்றுப் பெயர்கள்

02. மூவிட பெயர் அல்லாத மாற்றுப் பெயர்கள்

**63. மூவிடப் பெயர்களும் எவை?**

| | | |
|---|---|---|
| தன்மை ஒருமைப் பெயர் | - | நான் |
| தன்மைப் பன்மைப் பெயர் | - | நாம், நாங்கள் |
| முன்னிலை ஒருமைப் பெயர் | - | நீ |
| முன்னிலை பன்மைப் பெயர் | - | நீங்கள் |
| முன்னிலை மரியாதை ஒருமை | - | நீங்கள் |
| படர்க்கை ஒருமைப் பெயர் | - | அவன், அவள், அது |
| படர்க்கை பன்மை பெயர் | - | அவைகள், அவர்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**64. உளப் பாட்டுத் தன்மைப் பன்மை என்றால் என்ன? உ+ம் தருக?**

பேசுவோனையும் கேட்போனையும் உள்ளடக்கும் தன்மைப் பன்மைப் பெயர்கள் உளப் பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயர்கள் எனப்படும்.

**உதாரணம் :** நாம்

**65. உளப்படுத்தாத் தன்மைப் பன்மை என்றால் என்ன?**

பேசுவோனை மட்டும் சுட்டி கேட்போனை உள்ளடக்காத தன்மைப் பன்மைப் பெயர்கள் உளப்படுத்தாத் தன்மைப் பன்மைப் பெயர்கள் எனப்படும்.

**66. மூவிடப் பெயர் அல்லாத மாற்றுப் பெயர்கள் எவை?**

1. படர்க்கைத் தற் சுட்டுப் பெயர் உ+ம் தான், தாம், தாங்கள்
2. வினாப் பெயர்கள் உ + ம் யார், எது
3. வினாப் பெயர் அடியாகப் பிறக்கும் வேறு மாற்றுப் பெயர்கள்

   **உதாரணம் :** யார் + ஓ = யாரோ

   யார் + ஆவது = யாராவது
4. அளவுப் பெயர் உ+ம் சிலர், பல

**67. ஆக்கப் பெயர் என்றால் என்ன?**

பெயர் அல்லது வினைச் சொற்களுடன் விகுதியைச் சேர்த்து ஆக்கப்படும் பெயர் ஆக்கப் பெயர் எனப்படும்.

**உதாரணம் :** பெயர் + விகுதி - முதல் + ஆளி - முதலாளி

வினை + விகுதி - மலர் + ச்சி - மலர்ச்சி

**68. கூட்டுப் பெயர் என்றால் என்ன? உ + ம் தருக?**

இரண்டு அல்லது பல சொற்களை இணைத்து உருவாக்கப்படும் பெயர் கூட்டுப் பெயர் ஆகும்.

பெயர் + பெயர் - வான் + ஒலி - வானொலி

வினை + பெயர் - ஏவு + கணை - ஏவுகணை

**69. தொகைகள் எத்தனை வகைப்படும்?**

6 வகைப்படும்

1. வேற்றுமைத் தொகை
2. வினைத் தொகை
3. பண்புத் தொகை
4. உவமைத் தொகை
5. உம்மைத் தொகை
6. அன் மொழித் தொகை

**70. வேற்றுமைத் தொகை என்றால் என்ன? உதாரணம் தருக?**

ஐ, ஆல், கு, இன், அது, கண் ஆகிய இரண்டு முதல் ஏழாம் வேற்றுமை வரையான உருபுகள் மறைந்து நிற்க சொற்கள் இணைந்து கூட்டுப் பெயராக வந்தால் அது வேற்றுமைத் தொகை எனப்படும்.

**உதாரணம் :** மீன் சந்தை - மீனை விற்கும் சந்தை. இது 2ம் வேற்றுமைத் தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**71. வினைத் தொகை என்றால் என்ன?**

காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்க வினையடியும் பெயர்ச் சொல்லும் இணைந்து அமையும் சொல் வினைத் தொகை எனப்படும்.

உதாரணம் : கொல் களிறு - கொன்ற களிறு

கொல்கின்ற களிறு

கொல்லும் களிறு

**72. பண்பு தொகை என்றால் என்ன? உதாரணம் தருக?**

ஆகிய / ஆன என்ற பண்பு உருபு மறைந்து நிற்க ஒரு பண்பு உணர்த்தும் சொல் பிறிதொரு சொல்லோடு இணைந்து உருவாகும் தொகை பண்புத் தொகை எனப்படும்.

உதாரணம் : வட்ட மேசை (வட்டமாகிய மேசை)

**73. உவமைத் தொகை என்றால் என்ன?**

உவமை உருபு மறைந்து நிற்க இரண்டு பெயர்ச் சொற்கள் இணைந்து உருவாகும் தொகைச் சொல் உவமைத் தொகை ஆகும்.

உதாரணம் : முத்துப் பல் ( முத்துப் போன்ற பல்)

**74. உம்மைத் தொகை என்றால் என்ன?**

உம் என்னும் இடைச்சொல் மறைந்து நிற்க இரண்டு பெயர்ச் சொற்கள் இணைந்து உருவாகும் தொகைச் சொல் உம்மைத் தொகை எனப்படும்.

உதாரணம் : (இரவும் பகலும்)

**75. அன் மொழித் தொகை என்றால் என்ன?**

வேற்றுமைத் தொகை முதலிய தொகைகளுக்கும் புறத்தே அவையல்லாத பிற தொக்கி அதாவது மறைந்து வருதல் அது அன் மொழி தொகை எனப்படும்

உதாரணம் : பூங்குழல் வந்தாள்

**76. தொழிற் பெயர் என்றால் என்ன?**

வினையடியாகப் பிறந்து வினை நிகழ்தலை அல்லது வினை நிகழாமையைக் குறிக்கும் பெயர் இதுவாகும்.

உதாரணம் : வினையடி + தல்/த்தல்/அல்-போ+தல் = போதல்

வினையடி + இறந்தகால இடைநிலை + அது / மை

உதாரணம் : போ + ன் + அது = போனது

வினையடி + எதிர்மறை இடைநிலை + அது / மை

உதாரணம் : செய் + ஆ + மை = செய்யாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**77. வினையாலணையும் பெயர் என்றால் என்ன?**

வினையடியாகப் பிறந்து வினையையும் வினைபுரியும் கருத்தாவையும் உணர்த்தும் பெயர் வினையாலணையும் பெயர் ஆகும்.

உதாரணம் : வந்தவர், (வந்த + அவர்), வந்தவனை

**78. திணை எத்தனை வகைப்படும் அவை எவை?**

இரண்டு வகைப்படும்

உயர்திணை - மக்கள், தேவர், நரகர்

அஃறிணை - உயர்திணை தவிர்ந்த உயிர் உள்ளனவும் உயிர் இல்லாதனவும்.

**79. பால் எத்தனை வகைப்படும்? உதாரணம் தருக?**

ஐந்து வகைப்படும்.

உயர்திணை
- ஆண்பால் - இராமன்
- பெண்பால் - சீதை
- பலர் பால் - புலவர்கள்

அஃறிணை
- ஒன்றன்பால் - ஆடு
- பலவின்பால் - ஆடுகள்

**80. விகுதிகளைப் பால் அடிப்படையில் பிரித்துக் காட்டுக?**

| | | |
|---|---|---|
| ஆண்பால் விகுதிகள் | - | ஆன், அன் |
| பெண்பால் விகுதிகள் | - | ஆள், ஆட்டி, ஆத்தி, ஐ |
| பலர் பால் விகுதிகள் | - | கள், அர்கள், ஆர்கள், ஓர்கள், மார் |
| பலவின் பால் விகுதிகள் | - | கள், க்கள் |
| ஒன்றன் பால் விகுதிகள் | - | து |

**81. பால் விகுதி பெறாத பெயர்கள் சில தருக?**

ஆண் - அப்பா, தம்பி - ஆண்பால்

பெண் - அம்மா, தங்கை - பெண்பால்

**82. வினைச் சொற்களின் தன்மைகள் எவை?**

- ✳ காலம் காட்டும் - நடந்தான்
- ✳ ஏவல் பொருளில் வருதல் - போ
- ✳ செயலை உணர்த்தும் - படித்தேன்
- ✳ வினையடைகளைப் பெறும் - வேகமாக ஓடினேன்

**83. வினைச் சொற்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை எவை?**

1. தன்வினை பிறவினை
2. எச்சவினை முற்றுவினை
3. செய்வினை செயற்பாட்டு வினை
4. தெரிநிலை வினை குறிப்பு வினை
5. செயற்படு பொருள் குன்றிய குன்றாத வினை
6. தனிவினை கூட்டுவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**84. தனி வினை என்றால் என்ன?**

பகாப்பதமாக அமையும் வினையடியைக் கொண்டமைந்த வினைச்சொல் தனிவினை எனப்படும்.

உதாரணம் : வா - வந்தேன்

**85. கூட்டு வினை என்றால் என்ன?**

பகுபதமாவுள்ள வினையடிகளைக் கொண்ட வினைச் சொற்களைக் கூட்டு வினை என அழைப்போம்.

உதாரணம் : ஆசைப்படு

தந்தியடி

**86. தெரிநிலை வினை என்றால் என்ன?**

கால இடைநிலைகளைப் பெற்று வெளிப்படையாகக் காலம் காட்டும் வினை தெரிநிலை வினை எனப்படும்.

உதாரணம் : வந்தான், ஓடியது

**87. குறிப்பு வினை என்றால் என்ன?**

காலத்தை குறிப்பாகக் காட்டி வருவன குறிப்பு வினைகளாகும்.

உதாரணம் : கரியன்

நல்லன்

**88. முற்று வினை என்றால் என்ன?**

பிறிதொரு சொல்லை எஞ்சி நிற்காமல் தன்னளவில் பொருள் முடிவு உணர்த்தி நிற்கும் வினை, முற்று வினை அல்லது வினைமுற்று என அழைக்கப்படும்

உதாரணம் : நடந்தான்

இருந்தது

**89. எச்ச வினை என்றால் என்ன? உதாரணம் தருக?**

திணை, பால், எண், இட விகுதி பெறாது எச்ச வினை விகுதிகளைப் பெற்று வரும் வினைகள் எச்சவினைகள் அல்லது குறைவினைகள் எனப்படும்

உதாரணம் : வருகின்ற

நடந்த

**90. தெரிநிலை வினை முற்று எத்தனை வகைப்படும்? அவை எவை?**

மூன்று வகைப்படும்

1. எதிர்மறை வினை முற்று - போகவில்லை
2. ஏவல் வினை முற்று - இரு, செய்யாதே
3. வியங்கோள் வினை முற்று - வாழ்க, பெறுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**91. எச்ச வினை எத்தனை வகைப்படும்? உதாரணம் தருக?**

இரண்டு வகைப்படும்

பெயரெச்சம் - செய்த வேலை

வினையெச்சம் - வந்து இருந்தான்

**92. செய்வினை என்றால் என்ன?**

எழுவாயைக் கருத்தாவாகக் கொள்ளும் வினைகளை செய்வினைகள் என்பர்.

**உதாரணம் :** நான் பறந்தேன், இங்கு பார்த்தேன் என்பது செய்வினை

**93. செயற்பாட்டு வினை என்றால் என்ன?**

செயற்படு பொருளை எழுவாயாகக் கொள்ளும் வினை செயற்பாட்டு வினையாகும்.

**உதாரணம் :** பாகன் யானையால் கொல்லப்பட்டான்.

**94. ஒரு மொழி, தொடர்மொழி, பொதுமொழி என்பவற்றிற்கு உதாரணம் தருக?**

ஒரு மொழி - நிலம், நட ஒரு பொருளைத் தந்தது.

தொடர்மொழி - நிலம் வலிது, அதுகால், இரண்டு முதலாய பல பொருளைத்தருவது

பொதுமொழி - பலகை, தாமரை

இது ஒரு மொழியாய் ஒரு பொருளையும் தொடர் மொழியாய் பிரித்து பல பொருளையும் தரும்.

**95. வழக்கின் வகைகளைக் கூறி உதாரணம் தருக?**

இரண்டு வகைப்படும்

1. இயல்பு வழக்கு
2. தகுதி வழக்கு

* இங்கு இயல்பு வழக்கு 3 வகைப்படும்

இலக்கணமுடையது - கல், மண்

இலக்கணப் போலி - முன்றில் - இல் முன்

மரூஉ - அருமந்தன்ன - அருமருந்தன்ன

* தகுதி வழக்கு பின்வருமாறு 5 வகைப்படும்

இடக்கர் அடக்கல் - கால்கழுவி வருதல் - மலம் கழுவுதல்

மங்கலம் - துஞ்சினார் - செத்தார்

குழூஉக்குறி - பறி - பொன்

**96. தமிழ் மொழிச் சொற்களையும் தமிழ் மொழியோடு கலந்த சொற்களையும் அடிப்படையாகக் கொண்டு சொற்களை எவ்வாறு பாகுபடுத்தலாம்?**

இயற் சொல் - இலகு தமிழ்ச் சொல்

திரி சொல் - அரிதாகப் பொருள் உணரும் சொல்

வட சொல் - ஆரிய மொழியில் இருந்து வந்த சொல்

திசைச் சொல் - பிற மொழியில் இருந்து வந்த சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**97. வட சொல்லை எவ்வாறு பாகுபடுத்தலாம்?**

தற்பவம் - ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலானது.

**உதாரணம் :** சுகி, போகி

தற்சமம் - தமிழுக்கும் ஆரியத்திற்கும் பொதுவான எழுத்துக்களால் ஆனது.

**உதாரணம் :** அமலம், கமலம், காரணம்

**98. ஆறுவகைப் பெயர்களும் எவை?**

பொருட் பெயர் - மரம், கந்தன்

இடப் பெயர் - யாழ்ப்பாணத்தான், ஊரான்

காலப் பெயர் - தையான், வேனிலான்

சினைப்பெயர் - கண்ணன், மூக்கன்

குணப்பெயர் அல்லது பண்புப் பெயர் - கருமை, வெண்மை

தொழிற் பெயர் - பொரியல், பொங்கல்

**99. ஆகுபெயர் என்றால் என்ன?**

ஒரு பொருளுக்குரிய பெயர் பிறிதொரு பொருளுக்கு தொன்று தொட்டு வழங்கி வருமாயின் அது ஆகு பெயர் எனப்படும்.

உதாரணம் :- தாமரை சூடினாள்

இங்கு தாமரை என்கின்ற தாவரத்திற்குரிய பெயர் அதில் மலர்ந்த மலருக்கு ஆகி வந்துள்ளமையைக் கூறலாம்.

**100. தற்கால மொழியழயலாளர்கள் வேற்றுமையை பொருள் அழப்படையில் எவ்வாறு பாகுபடுத்தலாம்?**

1. எழுவாய் வேற்றுமை
2. செயற்படு பொருள் வேற்றுமை
3. கருவி வேற்றுமை
4. உடன் நிகழ்ச்சி வேற்றுமை
5. கொடை வேற்றுமை
6. நீங்கல் வேற்றுமை
7. இட வேற்றுமை
8. உடமை வேற்றுமை
9. விளி வேற்றுமை

**101. பெயரடைகள் எத்தனை வகைப்படும்? உதாரணம் தருக?**

1. தனிப் பெயரடை - இவன் ஒரு <u>படித்த</u> பையன்
2. ஆக்கப் பெயரடை - அவன் <u>அழகுள்ள</u> மனிதன் (அழகு + உள்ள)
3. பெயரடை அடுக்கி வருதல் - <u>சிறிய சிறிய</u> வீடுகள்

**102. வினையடைகள் எத்தனை வகைப்படும்? உதாரணம் தருக?**

தனிவினையடை - நான் சுடச் சுடச் சாப்பிட்டேன்

கூட்டு வினையடை - வேகமாக வந்தான் (வேகம் + ஆக)

வினை அடைகளை அடுத்து வருதல் - நீளம் நீளமான வெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகேஸ்வரன்
I LOVE My
Father

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org